உ

சிவமயம்.

ஸ்ரீ சேதுராமேசுர ஸ்தல புராணம்.



பார்வதி பிரஸ்,

ிரிண்டர் & பப்ளிஷர், இராமேஸ்வரம்.



ஸ்ரீ பருவதவர்த்தனி

ஸ்ரீ ராமலிங்கப் பிரதிஷ்டை

ஸ்ரீ ராமநாதஸ்வாமி

K. M. P. Rameswaram.

THE NADAR PRESS LTD., SIVAKASI

உ

ஸ்ரீ பர்வதவர்த்தனி அம்பாள் ஸமேத
ராமநாதஸ்வாமி ஸகாயம்.

சேதுராமேசுர ஸ்தலபுராணம்.

விநாயகக்கடவுள் வணக்கம்.

திரைகடலுடுத்தவையத் திலகமாம்தேவைதன்னில்
பரையருள்பொங்குஞ்சேது பானருட்பாலிப்பேற்று
வரைகெந்தமாதனத்தால் வான்புகழோங்குமாண்பை
உரையதுசெய்தற்காகு வாகனன் பாதம் போற்றி.

மரகதம், முத்து முதலிய நவரத்னங்கள் ஜ்வலித்துக்கொண்டிருக்கும், நீலவர்ண குளிர்ந்த நீர்ப்பரப்பாகிய ஆழியை ஆடையாக உடுத்தியிருக்கப்பட்ட இவ்வையகத்திலே, திலகம் போன்று உயர்வுற்ற தலம் தேவைநகரமெனும் ஸ்ரீராமன் அருச்சித்த ராமேச்சுரத்திலே சதா வேத மந்தரங்களை முழக்கிக்கொண்டிருக்கும் ஜெகத்துக்கே ஓர் தீர்த்தம் ''சேது'' என்றபேருடன் சக்தி சிவசொரூபமாய் விளங்குகிறது. அதன் மகிமையையும் கற்பக விருட்சங்கள் நிறைந்த கந்தமாதன தெய்வத் தன்மையையும் உரைசெய்யத் துணியுமிவ்வடியவன்பாற் கருணை புரிவாய் கணநாதனே'' என்று சூதமுனிவர் விநாயகக்கடவுளுக்கு திருக்காப்புச் சூடினார்.

ஸ்ரீ
இராமநாதசுவாமி துதி.

பூந்தவிசனிருந்த பிரான்முதலோர் காணப் புண்டரிக மகள் கொழுநன் புகழிலங்கை, வேந்தனுயிர்ப்பழி கழுவு முகத்தால் யார்க்கும் விடையவனேயுடையவனும் வேதவாய்மை, யாந்த ரங்கம் வெளிசெய்வானனவரோடு மணேந்துகந்த மாதனத் திலருச்சித்தேத்து, மேந்துபுனற்சடிலமுடி யிராமநாதனிணே யடிச்செந்தாமரைகளிறைஞ்சிவாழ்வாம்.

ஸ்ரீமந்நாருயணனின் அவதாரமாகிய ராமபிரான் பிர்ம அம்சமாகிய இலங்கைவேந்தனைக் கொன்றத ஞல் அவன் உயிர்ப்பழிகழுவுதலாகிய பிர்மஹத்தி தோஷம் நீங்கவேண்டி அரிபிர்மர்களும்கூட,கெந்த மாதனத்தை அடைந்து எந்தப்பரம்பொருளை அருச்சித்தாஞே அத்தகையை கெங்கை யோர் புறம் ஒழுகும் சடையினனும் சந்திரனேர்புறம் மின்னும் முடியினனுமாகிய ஸ்ரீ ராமநாதனின் அரவிந்தமலர்த்தாள் களிறைஞ்சிவணங்குவோம்.

ஸ்ரீ
பர்வதவர்த்தினியம்மை துதி.

தண்ணெனவும்வெச்செனவுந்தந்து சாயாத்தகை பயின்றுவிட நீக்கித்தலைவற்கென்று, முண்ணமுதந்தனையுதவியிமையமேரு வுயர்சிகரமந்தரத்தையொருவிச்சேர்ந்துங், கண்ணுதலைவிளர்ப் புறலாற்கயிலையெள்ளிக்கௌணியர்க்குத் தமிழ்சுரக்குங் காட்சி யாலே, வண்ணமுலைமலயமலைமா: னுங்கன்னி மலைவளர்காதலி மலர்த்தாண்மனத்துள்வைப்பாம்,

அகிலாண்டங்களிலுமுள்ள சர்வ ஜீவராசிகட்கும் சமநிலையில் அமுதமூட்டிக்கொண்டிருக்கும் அன்புத்தாய், தலைவனாகிய சிவபெருமானுக்கும் விஷம் நீங்கிய முதலமுதந்தனை அள்ளி அள்ளித்தரும் கருணைகொண்ட ஜோதிமாது ஸ்வர்ணக்கிண்ணத்திலே திருஞானசம்பந்தருக்கு முலைப்பால் சுரக்க அது தமிழ்பால் சுரந்த அருள் நிலையளித்த கன்னி மலைவளர்காதலி பர்வதவர்த்தனியின் பூந்தாளினை இதயத்துள் வைப்போம்.

அத்ரபூர்வம் மகாதேவ:

ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி சீதாதேவியிடம் கூறுகின்றார்:—

"அத்ர பூர்வம் மகாதேவ: ப்ரஸாத
மகரோத் ப்ரபு:"

— வால்மீகிராமாயணம்.

இராவணசம்மாரத்தை வெற்றிகரமாய் முடித்து, விபீஷணுள்வாருக்கு இலங்காதிப முடி சூட்டல் விழாவாற்றி: புட்பக விமானத்தமர்ந்து தன் நாடுதிரும்பிவந்து கொண்டிருக்கும் ஸ்ரீராமன் கடலினைக்கடந்து கந்தமாதனத்தை யணுகியதும் சரீரபுளகாங்கித மெய்தினன்; பக்திப்பெருக்கால் பரவசமானன்; அமிர்தமொத்த இனியகானங்களைப் போன்றும் மகா மகிமைதங்கிய மந்திரங்களைப் போன்றும் சொல்கின்ருன், ஹே! சீதா "இவ்விடத்தில் முன்னர் கருணைக்கடலாகிய ஈஸ்வரன் அனுக்ரகத்தை செய்தார்" ஈஸ்வரன் பரமதயாளுவாகிய பிரபுவன்ரே! என்று ஆனந்தபாஸ்பம் பொழிந்து முடித்தான்.

ஹே! மாதவத்தோர்களே, ஏகாக்ர சித்த சுத்தர்களாய் கேண்மின்! என்று பௌராணிக சாகரமாகிய சூதமாமுனிவர் சௌனகாதி மகருஷிகளுக்குஉபதேசிக்கின்ருர்.

மகாவிட்டுணுவானவர் ராமாவதாரம் எடுக்கும் ஒரு விநாடிமுன் கந்தமாதனத்தில் சிவபெருமானைப் பூஜிக்கவே அவ்வகண்ட பரிபூரண சின்மயானந்த சொரூபத்திலிருந்து ஓர் ஜோதிப்பிழம்பானது எழும்பி தன்னுள் ஐக்யமானதும் அடுத்த விநாடியே ஸ்ரீராமஜெனனம் ஆனதாதலால் இவ்வரிய அனுக்ரகத்தையே பூர்வத்தில் ஈஸ்வரன் தனக்குச்செய்தார் என்றும் அதன் சக்தியே திரிலோகாதிபதியாகிய இலங்கேஸ்வரனையும் அவனது மாயாவல்லப சேனுசாகரத்தையும் ஜெயிக்க காரணமானதென்றும் சீதாபிராட்டியிடம் ராமசாமி கூறியதின் பொருள்.

ஸ்ரீராமச்சந்திரனல் ராமேச்வரம் என்றழைக்கப்பட்ட இம்மாபெரும் புண்ணிய ஸ்தலமானது ஆதிமுதலான இருபத்தெட்டு சதுர்யுகங்களாக தேவையம்பதி என்ற திருநாமத்துடன் நினைத்தவற்றை அப்படியேளிக்கத்தக்க கற்பக விருட்சங்கள் நிறைந்த கந்தமாதனமாமலைச் சாரலில் தெய்வங்கள் வசிக்கும் வசந்தமண்டபமாக விளங்கின.

சாட்சாத் சிவபெருமானை ''பரிபூரண ஆனந்த சொரூபத்தில்'' தரிசிக்கும் தலம் இவ்வகிலாண்டங்களுள்ளும் கெந்தமாதனம் ஒன்றுதான் என்னும் வாய்மையையும், மகாவிஷ்ணு ஒவ்வொரு அவதாரங்களிலும் கெந்தமாதனத் தேவைப்பதி சென்று பரிபூரணனந்த சிவசொரூபத்தை தரி

சித்து ஆசி பெற்றே சென்றனர் என்னும் தெய்வீகச் செயலையும், பூர்வம் சிவசபையில் குறுமுனிவர் தேவர்களிடையே வெளிப்படுத்தினர். ஆயினும் தேவாதிகளன்றி இதுகாறுமிவ் வுண்மையை எவ்வுலகினரும் அறியமாட்டார்கள். சதா வேதகோஷங்கள் முழக்கிக்கொண்டிருக்கும் நைமிசாரண்யவாசிகளே! உங்கள்பால் நமக்கேற்பட்டுள்ள பிரீதியினால் இதைச்சொன்னோம் என்று சூதபௌராணிகர் மேலும் சொல்வாராயினர் முனிசிரேஷ்டர்களே, பிர்மதேவனின் பௌத்ரனாகிய தசமுகராவனேஸ்வரன் பிரதிதினமும் உதய காலங்களில் சப்த சமுத்ரதீர சிவபூஜை செய்த பின் கெந்தமாதனஞ்சென்று பரிபூரணனந்த சிவசொரூபத்தைக் காண்பான் ராமராவண யுத்தகாலங்களிலுங்கூட இத்தரிசனத்தை இராவணன் கைவிடவில்லை. கடைசியுத்த தினத்தன்று இலங்காதிபன் இமைநேரத்தில் புரிந்த மகாஉக்ரமான தியானமானது சராசரங்களை எல்லாம் ஆனந்த பரிபூரணமாக்கி அதிலே அனந்தானந்த சிவசொரூபகாட்சியைக் காண சிவமே தானாகும் உயர் பெரும்பேற்றை கெந்தமாதனத்திலே அன்று பெற்றான்.

மேலும் இப் பரிசுத்த தெய்வீகத் தலம் பராசக்தியின் திருவருட்கடாட்சத்தால் வேத-சாகர-தீர்த்த சங்கமமாகிய ஸ்ரீ சேது தீர்த்தத்தைப்

பெற்று பின்னர் ஸ்ரீ ராமாவாதாரத்தால் சிவலிங்கப் பிரதிஷ்டையும் இராமேசுர திருநாமத்தையு மேற்று தல, தீர்த்த, மூர்த்தி யிம்மூன்று மகத்வங்களும் பரிபூரண்ம் வாய்ந்த நிகரற்ற க்ஷேத்ரமாய் பரதகண்டத்திலே தக்கிணத் திசையிலே சேது தீரத்தில் கந்தமாதன சாரலிலே பிரகாசிக்கின்றது.

ஹே! முனிவர்காள், கிருதயுகத்திலே ஞானத்தினுலும், திரேதாயுகத்திலே யாகத்தினுலும்; துவாபரயுகத்திலே தானத்தினுலும், மனுமக்கள் மோட்ச சாம்பிராச்யத்தை யடைவார்கள். ஆனல் எல்லாயுகங்களிலும் எந்தநாளிலும் எச்சமயத்திலும் கெந்தமாதன தெரிசனம் யாவற்றிற்கும் மேலான முக்திப்பேற்றை யளிக்க வல்லது. கலியுகத்திலே கந்தமாதன மகிமைகளை சேதுதீர்த்தம் ஸ்வீகரித்துக்கொண்டிருப்பதால் கெந்தமாதனமே சேது, சேதுவே ராமேஸ்வரம் என்பதை நீவீர் யாவரும் உணரக்கடவீர்.

இத்தகைய யியம்புதற்கரிய மகோன்னத மகத்வம் படைத்த கந்தமாதன ராமேச்சுரத்தை யடைந்து சேது நீராடி ஆனந்த பரிபூரணனுகிய ஸ்ரீராமநாதக்கடவுளை வழிபட்டு இம்மையில் குபேர சம்பத்தையும், அரம்பையர் போகத்தையும், ஆசையற்ற சுத்த மனத்தையும் பெற்று, செய்த பாவங்களனைத்தையும் போக்கி, செய்யவிரும்பிய புண்ணியங்களனைத்தின் பலனையும் சகல யாகங்

கள், தீர்த்தங்கள், யோகங்கள், விரதங்களாற் பெறும் பயன்களையும், பிர்மலோகம், விட்டுணு லோகம், ருத்ரலோக மாதியவைகளினின்பங்களை யும், கல்வி, ஆயிசுபலம், வேதபாண்டித்தியம், சிறப்பு மந்திரசித்தியாதி இட்ட சித்திகளையும் மறுமையில் மோட்சத்தையும் அடைவீர்களாக.

கெந்தமாதனபர்வத மகிமை.

--

நெடிய கடல்சூழ்ந்த இப் பூமண்டலத்தில் பிர்மசிருஷ்டியில் மிகச்சிறந்து பூமகளின் ரத்னக் கிரீடங்களெனப் பேர்பெற்று விளங்காநின்ற இமயம், மந்தரம், கைலை, விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம், கெந்தமாதனம் ஆகிய யிவ்வஷ்டமா பர்வதங்களில் மகாபுனிதத்தன்மை வாய்ந்ததும் பிர்ம ரகஸ்யங்கள் பலவற்றுக்கு ஆதாரமாயுள்ளதும் உலகிலுள்ள சகல தீர்த்தங்களும் புண்ய நதிகளும் விரும்பி வசித்துவருவதும், தேவர்கள், ரிஷீஷ்வரர்கள், சித்தவித்தியாதரர்கள், கருடகாந்தர்வர்கள், இந்திராதி அஷ்டதிக்குப் பாலகர்கள், சூரிய சந்திரர்கள், தேவமாதர்கள் முதலியோர்களும் ஸ்வர்க்கம், வைகுண்டம் முதலிய புண்ணிய லோகங்களிலே வாசஞ்செய்யும் பாக்யவான்களும், சத்யலோகத்திலே குளிர்ச்சி பொருந்திய வெண்டாமரை மலரில் வீற்றிருக்கும் வாணிகேள்வனுகிய

பிர்மதேவனும், வைகுந்தவாசனுகிய மகாவிட்டுணு திருமகள் சமேதராயும், மலைமடைந்தையோடு சிவபெருமானும் உல்லாசப் பொழுதுபோக்குக்காக வசந்த மண்டபமாக்கிக்கொண்டதும் கெந்தமாதன பர்வதம் ஒன்றேயாம்.

தெட்சிணபாகத்தில் ரெத்தினுகர மகாசமுத்திரமும் உத்தரபாகத்தில் மகோததி மகா சமுத்திரமும் திகழ மத்தியிலிருக்கப்பட்ட இம்மாமலையின் தோற்றமானது இயற்கை வனப்பில் இயம்புதற்கரிய மிகச் சிறப்புவாய்ந்து விளங்கா நிற்கும்.

இம்மாமலையின் பிரதமச் சிறப்பு யாதெனில் நினைத்தவற்றை விரும்பியவாறே அக்கணமே அளிக்கத்தக்க அபார மகிமைபூண்ட கற்பக விருட்சங்கள் எங்குபார்க்கினும் செழித்து வளர்ந்து நிற்பதும், காயகற்பங்களாகிய ஜோதிமா விருட்சமும் கருநெல்லித்தருவும், அமிர்த சஞ்சீவி, மிருத சஞ்சீவி, ஜீவசஞ்சீவி என்னப் பட்ட அரிய மூலிகைகளும் பச்சைப்பசேலென தழைத்து நிற்பதுமேயாம்.

இன்னும் இப் பர்வதமானது தேவர்கள் அமுத உணவின்றிப் பசித்தடைந்த பொழுதினுந் தாங்கும் பலவகை தெய்வீக இயற்கைச் செல்வங்களை தன்னகத்தே பெற்றிருக்கும் பெருமையுடையதுமாயுள்ளது. கற்பகோடி காலங்கண்டவர்களாய் பிறவிப்பெருங்கடலைக் கடந்து நிற்கும் மகருஷி

களின் ஆச்ரமங்களும், பன்னசாலைகளும், யாக கூடங்களும் பரிசுத்தமாக திகழ்வதுடன், எக்காலமும் வேதபாராயண கோஷங்களும், மந்திர கானங்களும், காருகபத்யம், தக்கிணுக்கினி, ஆகவநீயம் என் முத்தீகளாலாய வேள்விகளும் மங்களகரமாக கெந்தமாதனத்தில் முழங்கிக்கொண்டிருக்கும்.

தேவாந்திராதி பிர்மவிட்டுணுக்கள் தேவாதிகளுடன் வசிக்கும் பாகமானது ஜெகஜோதிமயமாய் தெய்வதச்சனின் மேம்படு திறமைக்கோர் அத்தாட்சி என்றே தோன்றும்.

தெய்வமங்கையர்களும் ருஷி பத்தினிகளும் ஒவ்வோர் சந்திர பிம்பங்களோவென்று தான் சொல்லவேண்டும். கனிந்த அன்புமயமாய் தத்தம் பதிகட்கு சிஸ்ருஷைசெய்துநிற்கும் அவர்களின் கற்புநிலை உண்மையிலேயே உலகில் சத்யத்தைக் காத்து நிற்பதற்காதாரமானவையாகும்.

இவற்றிற்கெலாம் மேலாக முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் ஆன்மகோடிகளிடத்துப் பொருந்திய பெருங்கருணையினுலே இப்பர்வதத்தில் சதா பிரசன்னமாகி எளிதில் காட்சியளித்துக் கொண்டிருப்பார்.

கெந்தமாதனத்தில் அகத்தியர் புராண பிரசங்கம்.

இத்தகைய மகோன்னதம் பொருந்திய மலையில் பூர்வகாலத்தில் அகத்திய மாமுனிவர்வர மெய் யன்பனின் வருகையையுணர்ந்த சிவபெருமான் களிப்புற்று அன்று கெந்தமாதனத்தையே புதிய ஆனந்தமய தோற்றத்துடன் விளங்கச் செய்து குறுமுனிக்குப் பிரீதியான ஆனந்தரூபக் காட்சி யை யளித்தார். "இவ்வுலகமனைத்தும் குணாதீத ருகிய தேவரீரது திருமேனியினொளியினாலன்றி விளங்கா. அஃதன்றி அதனை நேரே நின்றாளு கின்ற பிறையணிமுதலே, ஞானரூபமாகிய தேவ ரீரை கற்பனையினாலே நாமரூப வடிவாக வறிவதல் லது தேவரீரை உள்ளபடி யாரறிவார்; சாக்ர, சுவப்பன சுழுத்தி, வாக்காகியும் அங்ஙனங்கானு மிடத்துத் துரியாதீத வடிவாயுமிருக்கிறவள்ளலே; அடியார்க்கடியாயாதிமூலமே என்று ஸ்தோத் தரித்து பக்திவெள்ளத்திலே ஆடி நிற்கும் குறு முனிவரைப்பார்த்து முனிநாதா, இன்னமுத மூட்டுவிக்கும் செந்தமிழ் பழமுனியே, நற்றரு ணத்தில் உம்மை நாமிங்கு பெற்றோம். இவ்வகி லாண்ட திருசபையின்கண் தெட்சின பூமியிற்றி கழும் முதற்றலங்களின் மான்மியங்களை உரை செய்மின்! என்றாக்ஞாபிக்க, பாக்யம் எனச்சிர

மேற்கொண்ட தமிழ் முனிவர் குற்ருலம், கெந்த மாதன தேவையம்பதி இவ்விரண்டு முதற்றல மென்றும் அவற்றின் மகத்துவங்களை சாங்கோப சாங்கமாகவும் விரிவுரை செய்யத்துடங்கினர்.

இவ்வண்ணம் அகிலாண்டங்களிலுமுள்ள தேவாதிகள் கூடிய திருச்சபையில் அகத்தியனுர் புராணபிரசங்கம் செய்யத்துடங்கி குற்ருலமான்மியத்தை நூற்ருண்டிலும் கெந்தமாதன சேதுச் சரித்திரத்தை ஓராயிரத்தெண்ணுண்டுகளிலும் பிரசங்கித்து சம்பூரணஞ் செய்வித்தார். ஸ்ரீ கெந்தமாதனச் சேது இறவாதிருக்க வரமருளும் ஞானபூமியன்ருே?

நைமிசாரண்யச் சிறப்பு.

பிரமாவின் புத்திரர்களாகிய சௌனகாதி முனிவர்கள் பிறவிப்பிணியைப் போக்குமாறு சிவபெருமானை நோக்கி அருந்தவஞ்செய்தற்கமைதியாகிய இடம் யாதென்று தந்தையாகிய பிரமனிடத்து வினவ, அவன் ஒரு தருப்பையை யெடுத்துச் சக்கரமாக்கி யுருட்டி "இது தங்கியவிடமே நீவிர் அருந்தவஞ்செய்தற்கமைதியாயது" என்று சொல்லி அனுப்பினன். அது தங்கியவிடமே நைமிசாரணியமாகும்.

இது, நெடுங்காலம் அருந்தவம் பயின்ற வனேக வயதுடையவர்களும் முப்பத்துமுக்கோடி தேவர்களினும் பெருந் தொகையினர்களுமாகிய முனிவர்கள் வசிக்கப்பெற்றதும், பிறவிப்பிணிக் கஞ்சித் தன்கணுற்றோரை அறிவே வடிவாகிய சிவத்தோடு சேர்க்கும் பொருட்டுக் கற்பகாலங் களுக் கழிவில்லாததும், ஏனைய மிருகச்சத்தங்கள் கீழ்ப்படமேலோங்கி யெழுகின்ற உச்சசுரமாகிய வேதகோஷத்தையுடையதும், தன்னிடத்து வசிப் பவர்களிடத்தே காமம் வெகுளி மயக்கமாகிய முக் குற்றங்களில்லாமையால் மன்மதனும், மரணமில்லா மையால் இயமனுங்கண்டறியாத பெருமையை யுடையதும், கடல் சுவறினும் மழைவறப்பினுந் தன்னிடத்து வசிக்குஞ் சிவகோடிகளுக்கு உணவு முதலிய கொடுத்தலால் பூமிமுழுவதுக்கும் பொக் கிஷ சாலையாயிருப்பதும், தன்னிடத்துள்ள மிருக பட்சிகள் இயல்பாயுள்ள பகை நீங்கிக் கலந்து வேதாகம சாரமாகிய திரிபதார்த்த விலக்கணங் களைப் பேசி வசிக்கும் பெருமையை யுடையதும் பலவகை விருக்ஷசாலங்கள் பலவகை நருமணங் கமழும் புஷ்பஜாதிகள் பலவகைத் தடாகங்கள் பலவகை மலைகள் ஆதியவற்றாற் சிறப்புற்றோங்கிய துமாகிய பெருமை யுடையது. இந்த நைமிசாரத் திலே சௌனகாதி முனிவர்கள் தங்கள் தளத்திர புத்திர பௌத்திராதியர்களோடும் அட்டாங்க முதலிய யோகாப்பியாசிகளாயிருந்து தவஞ் செய்வாராயினர்.

நைமிசாரண்யத்தில் சூதமுனிவர் புராணப் பிரசங்கம்.

அந்த நைமிசாரண்யத்திலே, முமூட்சுக்களாகிய சௌனகாதி முனிவர்கள் நாற்பத்தெண்ணாயிரவரும், அவர்கள் புத்திர பௌத்திராதியர்களுஞ் சிவார்ச்சனுதியானமுடையர்களாய்த் திரிபதார்த்த விலக்கணங்களை யாராய்ந்து கொண்டிருக்கும் பொழுது, அங்கே, ஸ்ரீ வேதவியாத முனீந்திருடைய பூரண கடாட்சம்பெற்ற சூதமகாமுனிவர் வந்தார். அவரது வரவைக்கண்ட முனிவர்கள், பேரானந்தமடைந்தெழுந்தெதிர்கொண்டு வணங்கி உன்னதாசனத்திருத்திப் பாத்தியாசமனீயார்க்கியங் கொடுத்து நல்வரவு சொல்லி, "பௌராணிக சாகரமே! பூமியிற்சிரேஷ்டதலம் யாது? சிரேஷ்ட தீர்த்தங்களெவை? சிவபத்தியாதியாம் இஷ்ட சித்தி யெதனுலுண்டாகும்? என்று வினவினர். அது கேட்ட சூதமுனிவர் மிகமகிழ்ந்து தமதாசிரியரை மனமொழிமெய்களால் வழிபட்டு, "முனிவர்காள்! நான் முன்னெருகாலத்தும் ஒருவருக்குஞ் சொல்லாத அரிய சரித்திரமொன்றுளது. அது ஒருபட்டமனமுடைய நும்மனேர்க்கே சொல்லத் தக்கது" என்று சொல்வாராயினர்.

ரெத்திஞகர மகோததிசாகர சங்கமமாகிய சேது உற்பத்திச் சருக்கம்.

முனிவர்காள், இதுகாறும் மகாமகிமைபொருந்தியதும் காற்றுவாடை மானிடசரீரத்திலே பட்டமாத்திரத்தில் ஆயுள்விருத்தியும் மோக்ஷப்பிராப்தியும் தரவல்ல கந்தமாதனபர்வத மகத்துவத்தைச் சொன்னேம். இப்பொழுது பணமுடிகள் ஆயிரந்தரித்த ஆதிசேடனுலும் இதன் மகிமையை உள்ளவாறு விளக்கஞ்செய்தற்கரிய அத்துணை மாபெருஞ் சிறப்புவாய்ந்த அகிலலோக புண்ணிய தீர்த்தமாகிய சேதுமான்மியத்தைச் சொல்கின்றேம். ஓர் முறை ''சேது'' என்று மனதிட நினைத்தமாத்திரம் செய்தபாவங்களெல்லாம் அகலும் பாண்மையுடைய யித்திவ்ய சரிதையை பக்தி சிரத்தையாய்க் கேண்மின்! என்று சொல்லத் துடங்கினுர் பொதிகைவாழும் செந்தமிழ்பழமுனி.

கந்தமாதன மலையிலே சிவபிரான் ஏகாந்தமாய் கற்பகதருவின்கீழ் வீற்றிருந்த ஓர் சுபதினத்திலே உலகினையீன்ற உமையவள் அங்கு பிரசன்னமாக, களிப்பேறுவகை பூத்த சிவபெருமான் கருணை வடிவாக திகழ்ந்தார். சமயமறிந்த பராசக்தி நாயக, அடியாள் மனதில் கெடுகாள் ஓர்

எண்ணமானது குடிகொண்டிருக்கிறது. அது மிக வும் மகத்தானது. சர்வஜீவ ராசிகளுக்கும் சுலபத் தில் சர்வாபீஷ்ட சித்தியைத் தரவல்லது. ஜகத் துக்கே ஜெகஜோதியாய் பிரகாசித்துநிற்பது. புண் யங்களுக்கும் சத்யத்துக்கும் தாயகமானது. அடி யாளது கோரிக்கையை நிறைவேற்றியருள திரு வுளம்பற்ற வேண்டும் எனத்துதித்தாள். எம்பெரு மான் களிப்புற்று, சர்வலோகங்களிலுமுள்ள சகல ஜீவராசிகளுள்ளும் சக்திசொரூபமாய் நின்று ஜகத் துக்கே ஜீவனையளித்துக் கொண்டிருக்கும் உன் னால் ஆகாத காரியமும் ஒன்றுளதோ? அப்படி யாகாததாயின் உன் விருப்பந்தானென்ன? சொல் லாய் பெண்கள்நாயகமே என, உமயவள் வரங் கேட்கத்துவங்குமுன் ஸ்ரீ சித்திவிநாயமூர்த்தியை இதயத்துள் நினைத்தார். உலகங்களெல்லாமுய்யத் தன் நினைப்பு பரிபூரண சித்தியடைய வேண்டி மன முருகினள். ஹரிபிர்மர்களுக்குமரிய பரம் பொருளே, ஆதிமூலமே, தேவரீரின்கடாட்ச வீண்யத்தால் மகாமகிமை பூண்டிருக்கும் கந்த மாதன பர்வதச் சாரலிலே விளங்கிக்கொண்டிருக் கும் ரத்னகர மஹா சாகரத்தையும் மஹோததி மகாசமுத்ரத்தையும் சங்கமமாக்கவேண்டும். சங் கமமானது பூவாதி மேலுலகங்கள் ஏழிலும் அதா லாதி பாதாளலோகங்கள் ஏழிலுமுள்ள சகலபுண் யதீர்த்தங்கள் நதிகள் யாவற்றையும் வரவழைத்து அப்புனித தீர்த்தங்களின் பெருக்கால் இவ் விரு மஹா சமுத்திரங்களையும் ஒன்றாக்கி இம்மா

பெரும் புண்யதீர்த்தத்துக்கு பவசம்ஹார ஓங்கார ஒலியை சதா எழுப்பிக்கொண்டிருக்க வேண்டி திருநான்மறைகளேயும் தீர்த்த சொரூபமாய் சேர்ந் திருக்க அருள் புரியவும் வேண்டும். மேலும் எந்த தீர்த்தங்களுக்கு மளித்திராத மஹத்தான வரப் பிரஸாதங்களை இத்தீர்த்தத்துக்கு யளிக்கவேண் டும். இதில் நாமிருவரும் பிரதிதினமும் தீர்த்த மாடல் வேண்டும். இதுவே எமதுகோரிக்கை என் ருள். கருணைவடிவில் நின்ற ஈசன் அருள்மடை திறந்தார். தேவதுந்துமி குமுகுமுவென முழங் கிற்று தேவர்கள் மலர்மாரி தூவினர். மஹருஷிகள் சாமவேத பாருயணஞ் செய்தனர். தர்மதேவதை ரிஷபவாகனமாகத் தோன்ற தேவியுடன் வாகன மூர்ந்த எம்பிரான் மேலுலகத்தீர்த்தங்களை பூவில் வர மனத்திடை நினைத்தார். புவர்லோகத்திலி ருந்து புண்யாத்மாக்கள் ஆடும் காந்தாமணி, சுரேந்திரி ஸ்வர்ணகோடி முதலிய 82 ஆயிரம் மஹாபுண்ய தீர்த்தங்களும், சுவர்லோகத்திலி ருந்து ருத்ராம்சபுருஷர்களாடும், பிரளயாமிர்தம், தேவகாஞ்சனம், கனகவாரி, தாமிரபுஷ்கரணியும், அசுரபக்தர்களாடும் திரிகண்டாளநதி முதலிய பன்னீராயிரம் வரபிரஸாதமிக்க தீர்த்தங்களும், மஹாலோகத்திலிருந்து இந்திரர்களாடும் சோம சாகர மகாதீர்த்தமும், சனலோகத்திலிருந்து சூரி யசந்திரர்களாடும் சூர்யநதி, சந்திரநதியும், தவ லோகத்திலிருந்து பிர்மருஷிகளாடும் அமிர்ததா

ரா, அக்னிதாரா, அன்னபூரணி முதலிய இரண்டுலெட்சம் பவித்திர தீர்த்தங்களும், பஞ்சகலியாணி நதியும், சத்யலோகத்திலிருந்து சரஸ்வதி, மகாலட்சுமி, பார்வதி இம் மூன்று தெய்வங்களுமாடும் பிர்மதீர்த்தம், சரஸ்வதிதீர்த்தம், ஆலகாலநதி, ஜீவநதியும் பரமேஸ்வரனுடைய தெரிசனங்கிடைத்ததென்று பரம திருப்தியுடன் ஆரவாரித்துக்கொண்டு தாரைதாரையாய் வருஷித்து பூமியில் பிரவேசித்தன.

இங்ஙனமே பாதாள லோகங்களிலிருந்து பஞ்சவாகினி மஹாபரிசுத்த தீர்த்தங்களாகிய பிரிதிவி, அப்பு, வாயு, தேயு ஆகாய தீர்த்தங்களும் பிர்மாண்டபாணி நீலேந்திரஜாலி புண்யமயி சப்தசாகர கெங்கா முதலிய இருபத்துநான்குலட்சந் தீர்த்தங்களும் அதிவேகமாக கீழுலகங்களைக்கடந்து நிலத்தில்வந்து ஆகாயதீர்த்தங்களுடன் பெருகி இருபுறமும் பாய்ந்து சமுத்ரங்களை நோக்கியோடவே இரண்டு மகாசாகரங்களும் சம்பூரணமாய் சங்கமாயின.

அதுகண்ட சிவபெருமான் வேதகர்த்தாவாகிய பிர்மதேவனை நோக்கி இப்புண்ய தீர்த்த சாகர சங்கமத்துக்கு வேதசொரூபமளிக்கவேண்டியிருப்பதால் நான்கு வேதங்களையும் தீர்த்த சொரூபமாய் இதிலுறையச்செய்க எனக் கட்டளையிடவே, பிர்மதேவனும் மகிழ்ந்து ரிக், யசுர், சாம,

அதர்வன வேதங்களை தியானித்த மாத்திரம் சதுர்வேதங்களும் "ஓம்" என்ற பிரணவ மூலத்தை த்வனித்துக்கொண்டே சங்கமத்தில் பிரவேசித்தன. வேதங்கள் மந்திரகானங்களை சதா முழக்கிக்கொண்டிருக்கும் ஜெகத்துக்கே ஒன்றான இப்பவித்திர தீர்த்தம் இன்று உன்னிமித்தம் உற்பத்தி செய்யப்பட்டிருப்பதால் உனது கருத்துக்கிசைய அகில லோகங்களிலுமுள்ள எல்லாவகை ஜீவராசிகளுக்கும் மோட்சப் பிருப்தியை தன்னிலோர்முறை தீர்த்தமாடுவோர்கட்கு பரிபூரண நிறையாயளித்துக் கொண்டிருக்கக் கடவதென்று முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் எந்தப் புண்ய நதி தீர்த்தங்கட்குந் தந்திராததும் யுகாந்த காலம் தவஞ்செய்யினுங் கிடைத்தற்கரியதுமான வரப்பிரசாதத்தை யருளினார்.

வெற்றிபெற்ற லோகமாதாவாகிய பரமேஸ்வரி சர்வ பவநாசினியாகிய சேதுவை கண்டதும் அனந்தகோடிகலையுடன் தோன்றினாள். பரமனின் வாமபாகத்தில் அமர்ந்தாள். அண்டபிண்டங்களை எல்லாம் தன் சக்தியால் ஆட்டிநிற்கும் அகிலாண்ட நாயகி, விநாயகர், சுப்பிரமணியர் இருபுரம்நிற்க, இந்திரன், பிர்ம, விட்டுணு, சப்தருஷிகள், தேவர்கள் முதலியோர் சூழ சரஸ்வதி மகாலெட்சுமி ஆலத்தி எடுக்க ஜெய ஜெயவென முழங்கிக் கொண்டிருக்கும் அந்தராதுந்துமி, தேவதுந்துமி வாத்தியகோஷங்களுக்கிடையே பாரிஜாதமலரிதழ்

களின் வருஷிப்பை ஏற்று தீர்த்தத்தில்பிரவேசித்தாள்.

ஜெகந்மாதாவின் திருமேனிபட்ட மஹா சாகர சங்கமம் தன்னகத்தே வாழும் வலம்புரி, சலஞ்சலம், பாஞ்சசன்யம் முதலிய ஓங்காரசங்கங்களைக் கொண்டு பம், பம் என முழக்கிற்று. இவ்வாறு சாகரசங்கமத்திலே ஆனந்தசாகரம் மூழ்குவது போன்று தீர்த்தமாடி எழுந்த தேவியானவள் இத்தீர்த்தத்தை "சேது" என்று நாமகரணமிட்டழைத்தாள்.

இங்ஙனம் பரமேஸ்வரியின் ஹிருதயக் கமலத்திலே உற்பத்தியாகி பரமேஸ்வரனின் பேரருட்கடாட்சத்தாலே உலகினோர்க்கு கிடைத்திருக்கப்பட்ட புண்ணிய சாகரமாகிய ஸ்ரீ சேது தீர்த்தத்திலே பிர்ம விஷ்ணுகளாதி சகல தேவர்களும் நீராடி முன்னிலும் அதிக சக்தியும் திவ்ய சொரூபமும் பெற்று தத்தம் உலகம் போய் சேர்ந்தனர்.

கேளுங்கள்! முனிவர்களே, மறைநான்கின் அடிமுடியாக விளங்கும் ஆதியந்தரகிதனே இம் மாபெரும் தீர்த்தமாகிய சேதுவாக விளங்கும் மகிமையை உணருங்கள். மறைநான்குமாகத் திகழும் மிச்சேது வேதசாரமாகிய காயத்ரீ மகாமந்திரத்தை இரவும் பகலும் சதா பாராயணம் பண்

ணிக்கொண்டிருப்பதால்தான் சர்வ பாவங்களையும், அஞ்ஞானங்களையும் நாசம் செய்யக்கூடிய சக்தியுடைத்திருக்கின்றதென்பதையும் அறியுங்கள்.

மேலும், தபஸ்விகளே! கண்ணால் பார்த்த மாத்திரத்திலும், காற்றின்ஸ்பரிச மாத்திரத்திலும் தெய்வலோகப் பிருப்தியை அளிக்கவல்ல கெந்தமாதனமென்னும் கற்பக பர்வதத்தின் ஒப்பற்ற மகிமை இத்தூய சேதுவைச் சேர்ந்துவிட்டதால் இச்சேதுவானது பிர்மானந்த நித்தியானந்தப் பேரின்ப மூக்திவீட்டையளித்துக்கொண்டிருக்கின்றதென்பதையும் அறியுங்கள். பதினன்கு உலகங்களிலுமுள்ள வரப்பரசாதமிக்க புண்யதீர்த்தங்கள்; புண்யநதிகள் யாவுமிச்சேதுவில் பிரகாசித்துக் கொண்டிருப்பதனல் ஜீவர்களின் மனேபீஷ்டங்களை அவ்வாறே நிறைந்தளித்துக்கொண்டிருக்கின்றன என்பதையும் இருடிகளே! அறியுங்கள். ரெத்னகரம், மகோததி என்னுமிரு மகாசாகரங்களும் சர்வலோக தீர்த்தங்களினுல் சங்கமமாகி அகில உலகிலுமுள்ள எல்லாவகை சத்துள்ள ஜலங்களும் சேதுவில் ஒன்ருகக் கலந்துகொண்டிருப்பதினுல் யிச் சேதுவானது சர்வரோகங்களையும் பரிதிமுன் பனிமறையும் காட்சிபோன்று, நிர்மூலமாக்கி சீவர்களுக்கு தேஜஸ்மிக்க திடசரீரத்தை அளித்துக்கொண்டிருப்பதையும் அறியுங்கள்.

இத்தகைய சொல்லிமுடியாத கோடானு

கோடி மகிமைப் பிரதாபங்களையுடைய சேதுவை அகில உலகங்களிலுமுள்ள தேவர்கள், ரிஷிகள், கெந்தர்வர்கள், அசுரர்கள், நாகர்கள், மானிடர்கள், விலங்குகள், பறவைகள் முதலிய சர்வ சீவ ராசிகளுக்கும் இஷ்டகாமியங்களைப் பெற்று உய்யும் நிமித்தம் சாட்சாத் உமாகாந்தனுல் உண்டாக்கப் பட்டிருப்பதால் இதை விடுத்து காயகற்பமெனும் மருந்துகளையுட்கொள்ளல் வேண்டியதில்லை. சரிகை, கிரிகை, ஞானயோகம் முதலியவைகளை அனுஷ்டிக்கத் தேவையில்லை. தேகத்தைச்சுக்காக உலர்த்தி பஞ்சேந்திரியங்களையடக்கி சருகுகளையும் வாயுவையும் பட்சணம்செய்துகொண்டு பஞ்சாக்னி மத்தியில் நின்று வாடி பலவகை அங்க ஆசங்களிறுத்திக்கொண்டு கடுவெயிலிலும், ஊசிபோன்று தேகத்தில் தைக்கும் கொடியபனியிலும், மழையிலும் நனைந்து வருடக்கணக்காய் தபசுகளும் நிஷ்டைகளும் புரியவேண்டாம். தேசமெங்கும் அலைந்து திரிந்து க்ஷேத்ரதெரிசனம் தீர்த்த ஸ்நானம்செய்யவேண்டாம். ஆனுல் ஜோதிசொரூபமான சேதுவில் ஒரு தடவை தீர்த்தமாடிய மாத்திரம் வேதாகம ஞானவிளக்காகத் திகழ்வதுடன் சிவஞான மெய்யுணர்வு பூண்டு சாலோப, சாமீப, சாரூபமென்னும் முத்திவீடுகளைத்தாண்டி பிர்மமயமாய் ஜெகஜோதியாய் நித்யமயமாய் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் சாயுட்சய சம்பூரணனந்தப் பெரும்பேற்றை அடைந்தின்புறுவர் என்னும்

சத்யவசனத்தை இன்று உங்களுக்குபதேசித்தோம். நீவீர் பாக்யசாலிகள்என்று சூதபெருமான் மேலும் சொல்கிறூர்; இச்சேதுவில் பிர்மரிஷிகளில் எவரும் சதுர்யுகப்பிரளய நேரத்தில் மிகுந்த தைரியத்துடனே ஸ்நானம் செய்வார்களேயானல் சிவசொருபத்துடனிரண்டறக் கலந்து பிர்மானந்தப்பெரும்பேற்றை அடைவார்கள். யுகசந்தி நேரத்தில் 27 தடவை யிப்புனித சேதுவில் பிர்மதேவன் நீராடினுல் மஹாவிஷ்ணுபதவியும் இவ்விதம் நான்குயுகசந்தியிலும் தவராது சேதுநீராடும் மஹாவிஷ்ணுக்கள் ருத்ரபதவியும் பெறுவார்கள். அறுபது வருடங்களுக்கோர்முறை அறுபதாவது வருடசரியான சந்திநேரத்தில் இப்புனித சேதுநீராடலால் தேவர்கள் இந்திரபதவியை எய்துவார்கள்.

மேலும் இச்சேதுவைக் கண்ணுல் தெரிசித்தாலும் மனத்தால் நினைத்தாலும் இதில் ஸ்நானமாடினுலும் மாதா பிதா குரு தெய்வங்களை நிந்தித்த மாதோஷமும் அவர்களைக்கொன்ற கொடிய பாவமும், சத்ய சொரூபமாகயிருக்கப்பட்ட அந்தணர்களையும் சகல தேவதைகளும் குடிகொண்டிருக்கும் பசுக்களையும், சிசுக்களையும், மைந்தர்களையும் கோலைபுரிந்த மகாபாவமும், தஞ்சம் அடைந்தவர்களையும் அதிதிகளையும் விரட்டியடிக்கும் தோஷமும், பஞ்சகாலத்தில் அன்னமிட்டவரை கன்னமிடும் வஞ்சனையும், சுராபாணங்கள் செய்

யும் மகாபாவமும், சாலைவிருட்சங்களை வெட்டுந் தோஷமும், பாதாரசேர்க்கையின் அதர்மமும், உத்தமர்கள்பொருளைக் கொள்ளையடிப்பதும் பிறர் பசித்திருக்க உண்பதும், புறஞ்சொல்லி குடிகளைக் கெடுப்பதும், நாடிக்கொடுப்பவரைத் தடுக்கும் அநீதமும், சாலை, சத்திரம், கோயில்குளங்களை யிடிக்கும் பாவமும், நாணமிழந்தபெண்ணுடன் கூடும் தோஷமும், நோன்புகளை மத்தியில் விடும் தோஷமும், கேடுசெய்பவர்களோடுறவாடிய பாவமும், வயிற்றினில் பகிர் என்றிட வழக்கோரஞ் சொல்லிய அநீதமும், ஆணும்பெண்ணும் கூடும் கூட்டுரவைப்பிரிக்கும் பாதகமும், பாதிச்சாமத்தில் வீடுகளில் நெருப்பிடும் பாவமும், வாயில்லா பிராணிகளை வதைக்கும் மாபாதகமும், மாலையிட்டவனை இகழ்ந்து பரபுருஷனைச்சேரும் துரோகமும், கருவையழிக்கும் கொடியபாதகமும், ஆலயங்களில் புணர்கின்ற தோஷமும், மித்திரத்துரோகமும், சோதரத்துரோகமும், பொய்மொழிபுகன்ற மா பாவமும், ஜப தபங்களைவிட்ட தோஷமும் இப்பவித்திர சேதுவில் தீர்த்தமாடிய மாத்திரம் சூரியன்முன் நின்றபனிபோல ஒழிந்து போகும்.

மேலும், இவ்வகை கொடிய பாவதோஷங்கள் புரிபவர்களுக்கு தர்மதேவதையால் விதிக்கப்பட்ட "தாமித்ர, அந்தாமிஸ்ர, ரௌரவ, மஹாரௌரவ, குரும்பிபாக, காலசூத்ர, அசிபத்ரவன, க்ரு

மிபட்ச, அந்தகூப, சால்மலீ, சந்தம்ஸ, சூர்மி, வைதரணீ, பிராணரோத, விஸ்சன, லாலாபட்ச, அவிசி, சார்மேயாதன, ரட்சாகனுசன, சூலசந்த விஞேதன, தந்தசுகாசன், பர்யவர்த்தன், திரோ தான், சுஸிமுக், பூயசோனிதபட்ச, விஷிராக்னீ பரிபீடன முதலிய இருபத்தெட்டு மஹாநரகங் களில் பயங்கரயமபடர்களால் தள்ளப்பட்டு இம் சிக்கப்படுவார்களாதலால், இப்படிப்பட்ட பாவம் செய்தவர்கள் கெந்தமாதன இராமேச்சுரத்தை யடைந்து அங்கு புண்ய சொரூபமாகத்திகழும் ஸ்ரீசேதுவில் தீர்த்தமாடுவார்களேயானுல் அவர்கள் செய்த சகல பாவமும் அக்கணமே நிவாரணமாவ துடன் முற்சென்மங்களில் செய்த பாவதோஷங் களும் பஞ்சாய் பறந்துபோகும். சேதுவில் ஸ்நா னம் செய்யப்பட்ட பாக்யசாலிகள் மேற்கூறிய இருபத்தெட்டு மஹாநரகங்கள் எதிலும் தள்ளப் படமாட்டார்கள். காலபாசத்தை வீசி உயிர்கவரும் தென்திசையோனுகிய மறலியும், அவன் தூதர் களும் சர்வபவ நாசனியாக விளங்கிக்கொண்டிருக் கும் சேதுதீர்த்தமாடிய பரிசுத்த ஆத்மாக்களிடம் நெருங்குவதற்கு அச்சங் கொள்வார்களென்றுல் அப்படிப்பட்ட புண்யசாலிகளுக்கு நரகம் என் கின்ற பேச்சுத்தான் ஏது! பிர்மலோகம், விஷ்ணு லோகம், சிவலோகம் என்னும் மூவுலகும் ஸ்ரீசேது வையனுகிய புண்யாத்மாக்களுக்குச் சொந்தம் என்பதை தேவர்களே! அறியுங்கள்.

ஸ்ரீ சேதுதீர்த்த ஸ்பரிசமாத்திரத்தில் விலங்குகள், பறவைகள், ஊர்வன முதலிய ஜீவராசிகள் முன்ஜென்மங்களில் எத்தனைகொடிய கர்மங்களைச் செய்திருந்த போதிலும் அவைகளெல்லாம் விலக்கப்பட்டு ஜென்மசாபல்ய மடைவதற்குகந்த மானிடப்பிறப்பை எய்துவார்கள்.

இப்படிப்பட்ட இயம்புதற்கியலாத அபார மகிமை படைத்த ஸ்ரீ சேதுவில் சதாகாலமும் தேவசஞ்சாரமும் மகரிஷிகளின் ஸ்நானபான நேம நிஷ்டைகளுமாயிருக்கும் ஸ்வர்ணமயமான பிலக்ஷ விருட்சங்சள் பிரகாசித்துக்கொண்டிருப்பதும் அருணாமணா வென்னுமிரு மஹாநதிசளின் தேவாமிர்த ஜலத்தை பாணம் செய்து சத்யகுணமுள்ளவர்களாய் தேவரூபங்களையுடைத்து அநேக ஆயிர வருட ஆயுட்காலங்களையுடைய ஹம்ஸ புருடர்கள் சூழ அவர்கள் உபாசிக்கும்தேவனுகும் தகதகவென அக்னிசுவாலைவீசும் ஏழு நாவுகளையுடைய அக்னி பகவானுனவன் பிலட்சத்தின் றிவண் வந்து தினசரி சேதுஸ்நானம் செய்துபோவதும், சந்திரனுடைய சாநித்யம் மிகும் சால்மலித் வீபத்திலிருந்து சால்மலி மஹாவிருட்சத்தினடியில் வஸிக்கும் பட்சிராஜேந்திரனுகியவரும் ஞானசக்தி யுடையவனுமாகிய ஸ்ரீ கெருட பகவான் சேதுவை தெரிசித்துப் போவதும், அஷ்டதிக்குகளும் சதாஸ்வயம்புவாய் ஜெகஜோதியான பிரகாசத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும் அக்னிஸ்தம்பம் நிற்கும் குஜத்

வீபத்திலிருந்தும், தீர்த்தவதி ஜோதிஷதியும் கிரௌஞ்சமா பர்வதமும் ஒளிரும் கிரௌஞ்சத்வீபத்திலிருந்தும் அதிகாலையி ஸ்ரீ சிவசுப்பிரமணியக்கடவுளும் சந்திரபகவானும் ஸ்ரீசேதுஸ்நானம் செய்து போவதும், சாக விருக்ஷத்தினடியில் அமர்ந்திரா நின்ற ஸ்ரீவாயுதேவன் சேதுஸ்நானத்தை நாடி கெந்தமாதனம் வந்து போவதும் இன்னும் மானஸோத்ர பர்வதத்தின் நான்குதிக்குகளிலுமிருந்து இந்திரன், நிருதி, வருணன், இயமன், குபேரன், ஈஸானன் இவ்வறுவர்களும் அப்பர்வதத்தின் மேலிருக்கின்ற ஸம்வத்ஸர சொரூபமான காலசக்கரமும் புனிதசேதுநீராடிச் செல்வதும் புஷ்கரத் வீபத்திலே புஷ்பித்திருக்கும், அக்னியினுடைய பிரகாசம் பொருந்திய சிகையைப் போன்று ஒளிரும் நிர்மலமான லட்சம் இதழ்களையுடையமிகப்பெரிதாய தாமரைப்புஷ்பத்தில் வீற்றிருக்கும் கமலாஸனக்கடவுளாகிய பிர்மதேவன் சேதுநீராடி தினம்வந்துபோவதும் ஸ்வர்ணமயமான பூமிப்பரப்பின் மத்தியிலிருக்கும் லோகாலோக பர்வதத்தில் பிரசன்னமாயிருக்கப்பட்ட அஷ்ட ஐசுவரியங்களுக்கும் அஸ்டமாசித்திகளுக்கும் மூலவஸ்தாகிய பகவான் விசுவஸேனர் சகலலோக க்ஷேமத்தின் பொருட்டு இப்பவித்ர சேதுவில் அருணோதயகாலத்தில் நீராடிச்செல்வதும், பிர்ம சிருஷ்டியை விர்த்திசெய்யும்பொருட்டு ஸ்ரீ ஆடே கேசுரமூர்த்தியானவர் விதலலோகத்திலிருந்து

சேதுஸ்நானமாடிச் செல்வதும், சிரஞ்சீவியும் பாகவத சிகாமணியுமாகிய மகாபலிச்சக்ரவர்த்தி சுதலலோகத்திலிருந்து சேதுஸ்நானத்திற்குவருவதும், கிம்புருகண்டத்தில் சுத்தஷாட்குண்ய பரிபூரணராம் ஸ்ரீ ராமமூர்த்தியாகிய அரியைக்குறித்து உபாஸனை செய்து நிற்கும் ஆஞ்சநேயமூர்த்தியானவர் தினம் அதிகாலையில் கிம்புருகண்டத்திலிருந்து சேதுவை ஒரேபாய்ச்சலில் அடைந்து சேதுஸ்நானமாடி பின்னோர்பாய்ச்சலில் கிம்புருகண்டத்தையடைவதும் இவர்போன்ற சிரஞ்சீவியும் ஸ்ரீராமபக்தனுமாகிய விபீஷணன் இலங்காபுரியிலிருந்து புட்பகத்திலமர்ந்து தினம் சேதுஸ்நானமாடிச் செல்வதும், பாப்பிர்ம அம்ஸமாய் புண்யமயமாகி நிற்கும் ஸ்ரீ சேதுவின் அகண்டாகாரபுண்யப்பிரவாஹத்தை விளக்கி நிற்கின்றன.

மேலும் இளாவிதம், அரிகிம்புரு, பாரதம், கேதுமாலம், பத்தி, ராசுவம், ரம்மியம், இரண்யமகம், உத்தரகுருவென்று சொல்லப்பட்ட நவகண்டங்களிலுமுள்ள கோடானுகோடி சக்ரவர்த்திகள், ராஜராஜாக்கள், தனவந்தர்கள் முதலிய பிர்மக்ஷத்ரிய, வைசிய, சூத்ர நான்கு வருணத்தார்களும் அத்யந்தபக்தி விசுவாசத்துடனும் பரிசுத்த ஹிருதயபாவத்துடனும் தர்மநோக்குடனும் பந்துமித்ர குடும்பத்தினர்களுடனும் பொன், வெள்ளி முதலிய திரவியங்களை கைகையாய் அள்ளி இறைத்துக்கொண்டு சேது மஹாயாத்

திரை செய்யும் காட்சியும் சேதுதீரத்திலே நீராடும்போது அவர்களது முகமண்டல ஜோதி பிரகாச மகிழ்ச்சியும் சொல்லத்தரமல்ல.

நாம் மேற்சொல்லிய தெய்வீக அம்சமுடைய சேதுவினுடைய மகத்வத்தை உபசாரம் என்று சொல்பவன் சங்கரஜாதியிலே பிறந்து தரும விரோதியாவான். பஞ்சமா பாதங்களை ஒவ்வொன்றிலும் ஐம்பதினுயிரம் போக்கவல்லதும் ஆசையாகிய சமுத்திரத்தைத்தூர்த்து மனவோர்மையைத்தரவல்லதுமான மோக்ஷஸாதன சேது தீர்த்தமிருக்க, வேறுபல தீர்த்தங்களை விசேடமெனச் சொல்லுதல் அறிவற்றோர் செயலேயாகும் அவர்களது மயக்க மிகுதியைச் சொல்லமுடியாது. சேதுவின் பெருமையைப்பாராட்டுபவரும், விரும்பித்தெரிசிப்பவரும், நினைப்பவரும், தீண்டுபவரும், மேலே பிறவியெடார்கள். இவைகளிற் சிறிதுஞ் சந்தேகமில்லை. இது சத்தியம் என்று காய்ந்த மழுவை நாவினுலெடுப்பேன்" என்றருள் மொழி புகன்ற சூதமுனிவரின் ஆத்மீக உணர்ச்சி பிரவாஹத்தையும் மகாகடுமையான சத்யப்போக்கையும் கண்ட சௌனகாதிதமுனிவர் குழாம் அப்படியே ஸ்தம்பித்து உளங்குளிர்ந்த பக்தியினுல் ஆனந்தக் கண்ணீருகுத்து தூயசேதுவை மனதிடை நினைத்து ஆடியும் பாடியவண்ணமுமாயினர்.

சேதுபந்தனம்.

அயோத்தியாபுரிக்கரசனுன தசரத மஹாராஜனுல் கைகேயிக்குக் கொடுத்த வாக்குப்படி பதினுன்குவருஷம் வனத்தினில் கழிக்க வேண்டி ஸ்ரீ ராமச்சந்திரன் தனது பத்தினியாகிய சீதாதேவியுடன் தண்டகாரண்யத்தில் 10 வருடம் தங்கி வசிஷ்டாதி முனிவர்களுடைய ஆசிகளைப் பெற்று, அகத்தியமுனிவரால் ராம-ராவண மகாயுத்தம் நடைபெறும் என்றும் அப்பயங்கர யுத்தத்தில் ராவணுதி ராக்ஷஸ சம்ஹாரம் செய்து முடிய வேண்டியிருக்கிறதென்றும் ராவணனைக் கொன்ற பிர்ம்மஹத்தி தோஷம்தீர சேதுமத்தியில் பிரகாசிக்கும் கெந்தமாதனத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப்படும் என்றும் வருங்கால நிகழ்ச்சிகளை ஸ்ரீ ராமரிடம் தெரிவித்து, தசமுகங்களையுடைய ராவணேஸ்வரனையும் அவனது அரக்கர்களையும் அழிப்பதற்கு வேண்டிய சகலவித உபாயங்களும் தெரிவித்து சிவ தநுசைநிகர்த்தசிலையையும் கணைகளையும் விஸ்வாமித்திரனுல் ராமருக்கு பயிற்றுவித்திருதிருப்பதும் அரக்கர்களைக் கொல்வதற்கு இன்றியமையாததுமான அஸ்திர பிரயோக மந்திரங்களையும் விடும் அஸ்திரங்கள் ஒன்று பத்து நூறு ஆயிரம் பதினுயிரம் லக்ஷமாகப் பெருகி எதிரிகளை சம்ஹாரம் செய்யும் மகா மந்திரத்தையும் ராமருக்கு ஓதுவித்து ராவண

சம்ஹாரம் செய்தபின் அயோத்திக்குச் செல்லும் போது கெந்தமாதனத்தில் தன்னைச்சந்தித்துப் போகுமாறு ராமனை வேண்டிக்கொண்டு பொதிகையிலிருக்கும் தன் பொற்குடிசைக்கு அகஸ்திய மாமுனி சென்றூர்.

ராமரும் மீதிநாட்களை பஞ்சவடிதீர்த்தக்கரையில் பன்னகசாலை நிறுவி காலம்போக்கி வருகையில் ஓர்நாள் அவ்வனத்தில் உலாவிக்கொண்டிருந்த இலங்கை வேந்தனின் தங்கையாகிய சூர்ப்பநகையானவள் ராமரின் நீலமேனியைக்கண்டு காதல் கொண்டு தன்னை மணந்துகொள்ளுமாறு வேண்ட ஏகபத்தினி விரதனுகிய ஸ்ரீ ராமர் மறுத்து லக்ஷ்மணனிடத்தனுப்ப லக்ஷ்மணர் கோபாவேசம்பூண்டு சூர்ப்பநகையின் மூக்கையும், கொங்கையையும் பங்கப்படுத்திவிடவே சூர்ப்பநகையும் கொடியநீலிபோற் சீறிவிழுந்து இதோ உங்களை சின்னுபின்னப்படுத்தச் செய்கிறேன் பாருங்கள் என்று ஆர்ப்பரித்து தன்தமயனுகிய இராவணேஸ்வரனிடத்தில் போய் கண்களில் நீர் தாரை தாரையாய்வடிய அறுபட்டமூக்கிலும் ஸ்தன்னியத்திலுமிருந்து ரத்தம் ஒழுகிக்கொண்டும் தேகமெல்லாம் ரத்தக்தோய்ந்த அலங்கோலரூபத்துடனும் அலரி அடித்துப்புலம்பி தனக்கு ராமலெட்சுமணர்களால் நேரிட்ட விபத்துக்களைச் சொல்லி முறையிட்டு பழிக்குப்பழியாக சீதையை சிறை எடுத்து வரும்படி வேண்ட ராவணேஸ்வர

னும் அக்கணமே லங்கையைவிட்டுப் புறப்பட்டு மாரீசனைப் பொன்மானாக வேடமெடுப்பித்து பஞ்சவடிக்கரையில் சீதைமுன் மானைத் தோன்றச்செய்கையில் அம்மானின் தோற்றத்தில் மயங்கி அதைப் பிடித்துத்தரும்படி சீதையானவள் ராமனை வேண்டவும் பொய்மானென்றெண்ணுத ராமரும் மானைப் பின்துடர்ந்தும் பிடிக்கக் கூடாமையால் ஓர் கூறிய அம்பாலெய்யவே அம்பு பட்ட மானனது அபயக் குறல் கொண்டு லெக்ஷ்மணு! என்று மாயமாய்க்கத்திற்று.

இச்சப்தத்தைக்கேட்ட சீதையானவள் தன் பதிக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டதாகக்கருதி லெட்சுமணரைப் போய்ப் பார்த்துவரும்படி அனுப்ப, சமயம்பார்த்திருந்த இராவணன் சன்யாசி வேடங்கொண்டு சீதையிடம் பிச்சை கேட்க பிச்சையிடவந்த சீதையை பூமியோடு பேர்த்தெடுத்துத் தன் தேர்மீது வைத்து இலங்கையை நோக்கி நடக்கையில் வழியில் ஜடாயு வழிமறித்து சீதையை விட்டுவிடும்படி கேட்க இராவணன் சினந்து மறுக்க இருவருக்கும் யுத்தம் உண்டாகி அதில் இராவணன் ஜடாயுவைப் பலமாகத் தாக்கி குற்றுயிராய் கிலத்தில் போட்டுவிட்டு சீதையுடன் இலங்கைசேர்ந்து அசோகவனத்தில் திரிசடைமுதலிய அசுரஸ்திரீகள் சூழ சீதையை சிறைப்படுத்தி வைத்தான்.

இங்கிவ்விதமிருக்க மானைப் பின்தொடர்ந்து சென்ற ராமரும் லெட்சுமணரும் ஆசிரம்வந்து சீதையைப் பார்க்கவே காணாது பெருந் துயருற்று வனமெங்கும் தேடிவருகையில் வழியில் ஜடாயு குற்றுயிராய்க் கிடப்பதைப் பார்த்ததும் ஜடாயுவானவர் சகல சங்கதிகளையும் சொல்லிவிட்டு மரணமானார். பின் பம்பை ஆற்றங்கரையில் நின்றுகொண்டிருந்த அனுமாரை சினேகங்கொண்டு வாலியைக் கொன்று சுக்ரீவனுக்கு கிட்கிந்தையைப் பட்டாபிஷேகம் செய்வித்து அனுமானால் சீதை அசோக வனத்தில் சிறையிருப்பதை அறிந்து சீதையை மீட்டிவர அனுமார், சுக்ரீவன், அங்கதன், நளன் முதலிய வீரர்களுடன் எழுபத்தி இரண்டு வெள்ளம் வானர சேனைகளை அழைத்துக்கொண்டு தக்ஷிணமார்க்கமாகவந்து மயேந்திரகிரி பர்வதத்திற்கு அருகில் தென் சமுத்திரக்கரையில் தங்கி அவ்வாழிய சமுத்திரத்தைப் பார்த்து எவ்வாறு இப் பெருங்கடலை வானர சேனைகளுடன் கடந்து இலங்கைசேர்வோமென யோசித்துக்கொண்டிருக்கையில் தகப்பனார் மரணமும், ஆருயிர்க் காதலி பிரிவும், ராஜிய அலங்கோல முதலிய துயரங்களெல்லாம் அலைபோல் ஸ்ரீ ராமச்சந்திரனுடைய உள்ளத்திலெழும்பி வேதனை செய்யத்துடங்கின.

அவ்வேளையில் ஸ்ரீராமஸ்வாமியிடம் அடைக்கலம் புகவந்த ராவணேஸ்வரனுடைய தம்பியாகிய விபீஷணனும் அனுமானும் சுவாமிக்கு ஆறுதல்

கள் கூற ஸ்ரீ ராமரும் சமுத்ரராஜனுன வருண பகவானை அழைக்கக்கருதி அவ்விடத்திலேயே தர்ப்பையைப் பரப்பி அதின்மேல் வீற்றிருந்து ஏழுதினம் வருணமந்திரத்தைச் செபித்தும் வருணன் வாராததுகண்ட ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி பிரளயகாலருத்ரனைப் போல் சீறி எழுந்து இதோ ஒரு நொடியில் இவ்வாழியை ஒரே கணையால் வற்றடித்து நிலப்பரப்பாக்கி விடுகிறேனென மொழிந்து கோதண்டத்திடமாக வடவாமுக் கினியை கக்கக்கூடிய அக்கினிக்கணைகளைத் தொடுத்து வாரியில் விட்டார். சப்தசாகரங்களையும் வாட்டக்கூடிய அக்கணைகளானது அக்கினிச் சுவாலைகளை குபீல் குபீலெனக் கக்கிக்கொண்டு பிர்ம லோகம்வரை புகை முட்டி நிறைய சமுத்திரத்தி லுள்ள தண்ணீரையும் மீன் முதலிய ஜீவன்களை யும், மலைகளையும் வாட்டிக்கருக்கி வடவா முக்கினி போன்று எரித்துக்கொண்டிருக்கும்போது ஸ்ரீ ராமரானவர் பிறிதோர் பயங்கரமான அக்கினிக் கணையை கரத்திலெடுக்கவே அக்கினியால் பாதிக் கப்பட்ட வருணனுனவன் வருந்தியும் வராதிருந்த வன் தன் தேவிமார்களுடன் வந்து இராமசுவாமி யின் பாதாரவிந்தங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்து உயிருக்கு மன்றாடினுன். அக்காலையில் புருஷோத்தமனுன ராமரும் கருணையால் நிறையப் பெற்று வருணனை ஆதரித்து சமுத்ர ஆழமும் இலங்கையின் நீளமும் உரைப்பாய் வருணதேவே, என விளம்ப வருணனும் பணிந்து சொல்வான்

ஆழமானது இன்னதெனச் சொல்லமுடியாததாயிருக்கிறது நீளமோ நூறுயோசனை தூரமிருக்கின்றது என விடையளித்து மேலும் கூறுவான் சுவாமி! தேவரீருடன் சமுத்திரத்தில் அணைகட்டும் ஆற்றல்படைத்த ஒரு வானரத் தலைவன் வந்திருக்கிறான் அவன் பெயர் நளன். அவன் முன் ஜென்மத்தில் மயன் என்னும் தெய்வீக சிற்பனாகவும் இச்சென்மத்திலும் அந்த சிற்பதத்துவ அம்சங்களைப் பொருந்தியவனாய் நீரிலிட்ட கற்கள் மிதக்கும் வரப்பிரசாத முடையவனாகவும் இருக்கிறான். அவனைக்கொண்டு மிகச்சுலபத்தில் இம்மாபெரும் புனிதசேதுவில் அணைகட்டி பந்தனம் செய்யலாம் என யோசனைகூறி ஆசிபெற்றுச் சென்றான்.

ஒப்புயர்வற்ற மகிமை பூண்டு புண்ய சொரூபமாகத் திகழும் சேதுசாகரத்தை மூடி அணைகட்ட வேண்டியிருப்பதால் அதற்கு முதலில் ஆதிமூல தேவனை சேதுகால் சேதுமூலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் பூஜித்து வழிப்பாடு செய்து பின் நவக்ரகஸ்தாபனம் செய்து அதன்மேற்றான் சேது பந்தனம் செய்யவேண்டும் என்பதாய் வருணன் கூறிய வார்த்தைகளுக்கொப்ப ஸ்ரீராமசுவாமியும் சேதுமூலத்தில் (சேதுகால் உப்பூர். தேவிபட்டணம்) விநயக நவக்ரக பிரதிஷ்டை புரிந்து பின் தற்பசயனம் சென்று (திருப்புல்லாணி) நளனுக்கு சேதுபந்தனம்செய்ய உத்தரவளித்து பல ஆசிகள்

கூற நளனானவன் சுவாமியின் உத்தரவை சிரமேற் கொண்டு தயாராயிருக்கையில் அனுமான் முதலிய வானர வீரர்கள் பல திக்குகளுக்கும் சென்று பிர்மாண்டமான மலைகளைப் பெயர்த்தெடுத்து ஆகாயமார்க்கமாகப் பாய்ந்துவந்து நளன் கையில் கொடுக்க நளன் வாங்கி தெற்கு நோக்கி சேதுவில் திருவணை கட்டத் துடங்கினர்.

குமுகன், விருபாக்ஷன், துன்முகன், கேசரி, பனசன், சுதேஷனன், பத்மமுகன், துமிந்தன், நீலன், கவ்யன் முதலிய வானர வீரர்கள் கொண்டு வந்து கொடுக்கும் மலைப்பாறைகளை இடதுகையால் வாங்கி திருவணை கட்டுவதுபோல் அனுமான் கொண்டுவந்து கொடுக்கும் பர்வதக்குன்றுகளையும் தன் இடது கையால் வாங்கிய நளன் மீது அனுமான் அடங்காத கோபங்கொண்டு அடா நளா, கொஞ்சமும் மரியாதையற்று நான் கொண்டு வந்து கொடுக்கும் மலைப்பாறைகளை உனது இடக் கையால் அலட்சியமாகவாங்கிய உனது மமதையை இதோ க்ஷணப்பொழுதில் சிதைத்துப் போடு கிறேன் பாரென அறைகூவி நளன்மீது பாய்ந்து தும்சப்படுத்த எத்தனிக்கையில் ஸ்ரீராமச்சந்திரர் குறுக்கிட்டு, அப்பா! அனுமானே, கோபம் கொள்ளாதே, சாந்தம் அடைக, நளன் இச்சமயத் தில் இத்திருவணை கட்டும் மாபெரும் சிற்பியாக வும் நாமெல்லோரும் பணியாளர்களாக விருப்ப தும் வாஸ்தவமல்லவா! ஆதலால் நமக்குக் காரியக்

தான் முக்யமேயொழிய அற்ப விஷயங்களுக்காக நாம் நமது பெருந்தகைமையை இழந்துவிடக் கூடாது எனப் பல சாந்தமதிகளைக்கூறி அனுமானைத் தேற்றி பர்வதவங்களைப் பேர்த்தெடுத்து வரும்படி அனுப்பிவிட்டு நளனைப்பார்த்து வாராய் நள மகாவரப்பிரசாதியும் மாபெரும் பலிஷ்டனுக வும் கலைஞான சம்பன்னனுகவும் பெரியோனுகவு முள்ள மாருதி கொணர்ந்து கொடுக்கும் மலைப் பாறைகளை மாத்திரம் நீ உன்னிரு கைகளாலும் வாங்கி உனது திருப்பணியை இனிது நிறைவேற் றுவாயாக எனத் திருவாய் மலர்ந்தருளினுர்.

அவ்விதமே செய்வதாக சுவாமியிடம் நளன் உத்தரவு பெற்று வானர வீரர்கள் ஒருவரோ டொருவர் போட்டி போட்டுக்கொண்டு வசந்தமலை உனக்கென்றும் வஜ்ரமலை எனக்கென்றும் கண்ட கண்ட மலைகளையும் பாறைகளையும் பெயர்த்தும், உடைத்தும், அவைகளைச் சிலர் வால்களில் சுற்றிக் கொண்டும், சிலர் தோள்மீது சுமந்துகொண்டும், சிலர் சிரம்மீது வைத்துக்கொண்டும், சிலர் கரங் களில் ஏந்திக்கொண்டும் சந்தோஷ ஆரவாரங் களைச் செய்து கொண்டுவந்து கொடுக்கும் பிர்மாண்டமான மலைப்பாறைகளைத் தன் கையால் வாங்கிச் சமுத்திரத்தில் அடுக்கிக்கொண்டு வரு கையில் முதல்நாளில் 14 யோசனை தூரமும் இரண்டாவது தினத்தில் 20 யோசனை தூரமும் மூன்றும்நாளில் 21 யோசனை தூரமும் நான்காம்

நாளில் 22 யோசனை விஸ்தீரணமும் ஐந்தாம் நாளில் உற்சாகமிகும் வானர வீரர்களால் 23 யோசனை நிகளமும் ஆக 100 யோசனை நீளமும் சுவேல பர்வதம் வரைக்கும் செய்து முடித்த் திருவணையானது இலங்கைக்கரையை யடைந்தது. சேதுபந்தனத்தை பூரணமாய்ச் செய்து முடித்த சந்தோஷமும் உற்சாகமிக்க வானரவீரர்கள்மீதும் தங்களுடைய துயர்களை ஒழிக்கும் நிமித்தம் அரக்கர் சம்ஹாரம்செய்ய வழி நடந்துகொண்டிருக்கும் ஸ்ரீராமமூர்த்திமீதும் அக்காலையில் திருவணையை பார்க்க ஆகாயவீதியில் குழுமியிருந்த தேவர்கள் பாரிஜாதமலர்மாரி பெய்து ஜெயம்! ஜெயமென வாழ்த்தினர்.

"சேதுவுக்கு" தனுஷ்கோடி என்ற நாமம் ஏற்பட்ட வரலாறு,

இவ்வண்ணம் கட்டி முடிந்த திருவணையில் 72 வெள்ளம் வானர சேனைகளுடன் ராமசுவாமி நடந்துசென்று இலங்காபுரி பட்டணத்தை யடைந்து ராவணுதி ராக்ஷஸர்களுடன் 10 தினங்கள் கடும்போர் புரிந்து ராவணசம்ஹாரம் செய்து விபீஷணனுக்கு இலங்காபுரி பட்டாபிஷேகம்

சூட்டி சீதாபிராட்டியுடன் ராவணனால் குபேரனிடத்திலிருந்து சொந்தமாக்கிக்கொண்ட புட்பக விமானத்தில் வானராதிசேனைகளுடனும் விபீஷணனுடனும் ஆரோகணித்து இலங்கையை விட்டுத் திரும்பி வருகையில் முன் தண்டகாரண்யத்தில் அகத்திய மாமுனிவருக்குக் கொடுத்த வாக்குப்பிரகாரம் அவரைக் காண்பதற்கு கெந்தமாதன பர்வதத்திலிறங்க எண்ணங்கொண்டு அம்மாமலையை விமானம் அணுகியதும் அத்தெய்வீக விமானத்தில் வீற்றிருந்த ராமச்சந்திரமூர்த்தி மலையிலிறங்கும்படி நினைக்கவே விமானமும் கெந்தமாதன பர்வதத்திலிறங்கும்போது புண்ய சொரூபமான சேதுவானது அனந்த சயனனைக் கண்டதும் சந்தோஷ ஆரவாரங்கொண்டு அலைகளை வீசி எழுப்பி ஆனந்த வரவேற்பு கூறிற்று.

அகத்தியர் முதலிய சகல ரிஷிகளும் ராவணாதி அரக்கர் சம்ஹார விபரங்களை ராமச்சந்திரமூர்த்தியால் சவிஸ்தாரமாய்ச் சொல்லக் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சிப்பெருக்கெய்தி ராமச்சந்திரனை வாழ்த்தி இராவணனைக்கொன்ற பிரமஹத்தி தோஷந்தீர கெந்தமாதனத்தின் சாரலிலேயே சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து சாக்ஷாத் கைலாசபதியின் அருட்கடாட்சத்தை பெறுமாறு ஞாயங்களைக் கூறலாயினர்.

முனிவர்களுரைத்த இவ்வாய்மையைக்கேட்ட ராமசுவாமியும் சிவலிங்க ஸ்தாபனம் செய்ய அத்யந்த ஆவல்கொண்டு அதற்காயத்தமாகி ஜோதி சொரூபமாக ஒளிந்துகொண்டிருந்த சேதுவில் தீர்த்தஸ்நானமாட சீதாதேவி, லக்ஷுமணன், விபீஷணன், சுக்ரீவன் முதலியவர்களுடன் சேது தீரத்தையடைந்ததும் இலங்காதிபனுகிய விபீஷணன் இராமச்சந்திரமூர்த்தியைப் பார்த்து இரு கையும் சிரமேற்கூப்பி சொல்வானுயினன், ஓ! ரவிகுலதிலக, தேவரீரால் தர்ப்பசயனம் துடங்கி சுவேலபர்வதம்வரை சமுத்திரத்தில் கட்டப்பட்டுள்ள நூறுயோசனை நீளமுடைய திருவணையை அப்படியே விட்டுவிட்டால் வலிய அரக்கர்கள் அடிக்கடி மிகச்சுலபமாக பாரதத்தாய் பூமிக்கு வந்து மக்களுக்கு இடையூறுகளைச் செய்வார்களாதலால் இத்திருவணையை உடைத்துப்போடுமாறு வேண்டவும் அனுமார் முதலிய சகலர்களுமதை ஆமோதித்து நின்றூர்கள்.

இக் கருத்துக்கிசைந்த ராமச்சந்திரனும் கோதண்டத்தை கையிலெடுத்து அனேக வஜ்ரக்கணைகளை விடுத்து திருவணையைத் தூளாக்கிச் சிதைத்துப்போட்டு இதுகாறும் தேவரகசியமாயிருந்த சேது மகிமையை சீதா முதலியோருக்கு தெரிவிப்பான்வேண்டி கோதண்டத்தின் ஒரு கோடியைக் கையிற் பிடித்துக்கொண்டு மற்றொரு கோடியை சேதுதீர்த்தத்தில் ஊன்றி இப்புண்ய

தீர்த்தமாகிய சேதுவானது திரிக்ஷேத்திரதாரியாகிய பரமனுல் உற்பவித்ததென்றும் திரிமூர்த்திகளாகிய பிர்ம விஷ்ணு ருத்ரானுல் நித்திய மங்கள வரப்பிரசாதங்களைப் பெற்றிருக்கிறதென்பதையும் மூன்று காலங்களிலும் முக்குணங்களில் சாத்வீக ராசத செயல்களாகிய தானம், தவம், ஞானம், மெய்மை, மேன்மை, அருளுடமை, ஐம்புலனடக்கம், கல்வி, கேள்வி முதலியவற்றை ஈய்ந்தும் தாமதச்செயல்களாயாகி அநீதி, காமம், களவு, கொலை, பேருண்டி, நித்திரை, மறதி, கோபம், வஞ்சகம் முதலியவைகளைத் தவிர்த்தும் மக்களை நன்னெறியிற்றிருப்பும் வரப்பிரசாதமுடையதென்றும் கெந்தமாதனம் சர்வலோகதீர்த்தங்கள் நான்மறைகள் இம் மூன்று பெரும் சக்திகளும் ஒன்று சேர்ந்து மகாமகிமையோடு சேது என பெயர் பெற்றிருக்கிறதென்றும், பிர்மலோகம், விஷ்ணுலோகம், சிவலோகமாகிய மூன்று புண்ணிய உலகங்களுக்கும் வழிகாட்டி என்றும் ஊன்றிய விற்கோடியினுல் மூன்றுயிடங்களில் குறிப்பாக கீறிக்காட்டி, ஜெகஜோதியாக விளங்கிக்கொண்டிருக்கும் சேதுவில் சீதாதேவி சமேதமாகத் தீர்த்தமாடி எழுந்தார்கள்.

ஸ்ரீராமசுவாமியானவர் சீதா, ஹனுமான், சுக்ரீவன், முதலியோர் அறியவேண்டி தேவர்கஸ்யமாயிருந்த சேதுவின் மகிமையை தனுவின் கோடியினுல் கீறிக்காட்டி அதன் முக்தி மார்க்

கத்தை வெளியிட்டதினால் சேதுவுக்கு தனுஷ்கோடி என்ற பெயரும் உண்டாயிற்று.

இராவண பிரமகத்திச் சருக்கம்.

முனிவர்களனைவருஞ் சூதபௌராணிகரை நோக்கி, "ஐயனே, கொடிய இராவணன் இராக்கதனன்றோ! அவனைக் கொன்றது யாவருக்கும் பெருநன்மையாயிருப்ப, அது பிரம்மகத்தியாகி ஸ்ரீராமனை வருத்தியது எப்படி? பிராமணரல்லாதோரைக் கொல்வதும் பிரமகத்தியாகுமோ? அன்றியுந் தன்னையடைந்தவர்களது பழிபாவங்களனைத்தையு மொழிக்குஞ் ஸ்ரீராமனையும் பிரமகத்தி பற்றுமாயின், வேறியாரை விடாது. இதிலேயுள்ள எங்களது சந்தேகத்தை யொழித்தருள வேண்டு" மென்று வணங்கினர். அது கேட்ட சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களை நோக்கிச் சொல்லுவார்.

முனிவர்காள், காரணமின்றிக் காரியமுளதாமோ. பிரமாவினது புத்திரனாகிய புலத்தியனுக்கு விச்சிரவாவென்றொரு புத்திரனுதித்து நெடுங்கால மருந்தவஞ் செய்தனன். இவனிங்ஙன மருந்தவஞ் செய்யுங்காலத்திலே, சுமாலியென்னு

மாக்கன் பாதாலத்தினின்றும் புறப்பட்டுத் தீமைகளினது தூதுவன்போலத் தனது குலம் பெருகவுந் தேவகுலந் தாழவுந் தான்பெற்ற பேரழகு வாய்ந்த கைகசியென்னும் பெண்ணையுங் கையிற் பிடித்துக்கொண்டு பலவிடங்களிலுந் திரிவானாயினன். அக்காலத்து அவனது பேரனாகிப் புட்பகவிமானத்திலேறிவருங் குபேரனைக் கண்டு இவன்போற் சிறந்தவொருவன் நங்குலத்துதிப்பனானல் நம்மினத்தவர்களனைவருமெவருக்கு மஞ்சாமலெங்குந் திரிவார்களே'' யென்று சிந்தித்துத் தனது மகளை நோக்கி, ''எனதருமை மகளே, உனது பேரழகைக்கண்டா லுருப்பசியும் நாணுவள். இலக்குமியு மதி மயங்குவள். நீயும் பூரண சந்திரன்போலச் சிறந்தனை. உன்னைக் கண்டு யாவர் பிரிந்துபோவர். ஒருவன் பூமியிலே விலைமதிப்பிலாத இரத்தினத்தைப் பெற்றால் அதனைத் தக்கபடி பொன்னணியின் மத்தியிற் பதித்தாலன்றிச் சிறக்காது. அதுபோல உன்னையுந் தக்கவொரு புருடனிடத்திலே யொப்படைக்க நினைக்கிறேன். பேரழகுவாய்ந்த பெண்ணைப்பெற்றவர்கள் அவளைத்தக்க கணவனிட மொப்படையாராயின், அவர்களிடத்துத் திருமகளுங் கலைமகளும் வெறுத்து மூதேவியைக் காட்டி விலகுவர். பெறுதற்கரிய கனியும் பருவத்திலே யுண்பவருக்கே யினிதாகும். கன்னியர்களுந் தக்ககாலத்திலே தக்க கணவனோடு தழுவுவாராயின், தந்தையாரோடு

தாமும் பேரின்ப மடைவர். தேவர்முகத்தைத் தேவர்களன்றி மனுடரும் விரும்புவர். அதுபோல சிறந்தவுன்னை யாவரும் விரும்புவர். உன்கருத் தெப்படியோவென வஞ்சி யிதுகாறும் நினையாம லிருக்கிறூர்கள். உனதழகுக்கு வாய்ந்த கணவன் பின்வந்துன்னைத் தழுவட்டும். ஆதலால் நீ எங்கள் குலந் தழைத்தோங்கும் பொருட்டு புலத்தியன் மகனுகிய விச்சிரவாவென்பனதோ தவஞ் செய்கின் ரூன். அவனை நீ யடுத்து 'நானுனக்கு மனைவியாக விரும்புகிறே' னென்றுதழுவுதி. குபேரனை நிகர்த்த பல புத்திரருனக்குளராவர்'' என்றருளி னன். அதனைக் கைகசியும் கேட்டு நகைமுகத்தா ஞத்தரவு கொடுத்து விச்சிராவவென்பவன் றவஞ் செய்யு மிடத்தடைந்து மாலைக்காலத்திலே மின் னற்கொடியொன்று வந்தது போல முன்வந்து அவரது ஓமாக்கினியால் வாடியதுபோல சோர்ந்து நாணத்தினலொல்கி முகத்தைத் தாழ்த்துக் காலின் விரல்களால் நிலத்தைக் கீறி நின்றனள்.

விச்சிரவா என்பவனும் அவளைக்கண்டு ''பெண்ணே, நீயார்? உனது தந்தை யார்? நீ இந்த நேரத்திலிங்குவந்த காரணமென்னே? சொல்லுதி'' என்றனன். அது கேட்டுக் கைகசியுஞ் சொல்லுவாள் ''புலத்தியகுலப் புண்ணியமே, பஞ் சப்புலப் பகையைவென்ற புங்கவனே, தவவிசே டத்தா லெப்பொருளையு மெதனையு முள்ளபடி யறிபுமறிவினையுடைய வுமக்கு யான் சொல்வ தென்னை! ஆயினுந்தேவரீரது பணியை மறுத்

தல் சாலாது. யான் சுமாலியென்பவனுடைய மகள். அவனது உத்தரவினல் தேவரீரை யடைந்தேன். குணக்குன்றமே, இனித் தேவரீரது கருணையன்றிப் பிறிதில்லை'' யென்றுசொல்லி வணங்கினள். அதுகேட்ட முனிவரும் பின் சிறிது நேரம் யோசித்து, உள்ளபடி யனைத்தையு மறிந்து சொல்லுவார். ''பெண்ணே, நீ புத்திரப்பேறுக ருதிவந்தனை காலவயத்தாலும், இடதுவயத்தாலும் ,கருவயத்தாலுமுதிக்கும் பொருள்கள் பலவேறு பேதப்படும். நீ வந்தது மாலைக்காலமாதலால் உன் வயிற்றிற் பிறக்கும் புதல்வர்கள் எளியவர்களாய்த் தாழ்ந்த சகவாசமுடையவர்களாய்ப் பொய்யர்களாய்க் கொடுந்தொழில் புரிபவராய் புலாலுண்பவராய் அரக்கர்களாய் வருவார்க'' ளென்றருளினர். அதுகேட்டுக் கைகசியும் வணங்கி சொல்லுவாள் ''முனிவர்பெருமானே, எனக்கு எவராயினுமென்ன பொல்லாதவர்களாக வருகுதல் தேவரீரது புகழுக்காகுமோ'' என்று சொல்லி வணங்கினள். முனிவரு மதுகேட்டு சிறிது கருணைகூர்ந்து ''பெண்ணே, ஆயினும் நீ பெறுமக்களுள்ளே இளையவன் இராட்சதகுணமில்லாதவனுய் அறிவு கொடை தவம் நீதி இரக்கம் ஒழுக்கமுடையவனுய் எங்கள் குலத்துக் கியைந்து அரசனுகிப் பிறப்பான்'' என்றனர். கைகசியு மதுகேட்டு மனமகிழ்ந்து சிலநாளங்கிருந்து கலந்து வசிக்குங் காலத்தில் பத்துத்தலைகளும், இருபது கைகளும், செங்குஞ்சியும் மலைபோன்ற சரீரமும், பிளந்த

வாய்களும், வெண்பற்களும், பெருத்த வயறு முடையவனுகி இராவணன் என்ற பேருடனே பூமிவருந்தவும் அன்புகொடையருளில்லாதவனுகி பெரியோர்களஞ்சத்தக்கதாகவும் ஒரு புத்திரன் பிறந்தான். கைகசி பின்னுங் கும்பகன்னனென்று ஒருவனையுஞ் சூர்ப்பநகை யென்ருெரு பெண்ணை யும் பெற்றுப் பின்பு, ஒழுக்கம் வலிமை கொடை இன்சொல் அன்பு அருள் கல்வியாதிய பிறநற் செய்கைகளையுமுடைய விபீடணனென்ருெருவனை யும் பெற்று முன்னுலாலகாலத்தையும் பின் னமு தத்தையும் பெற்ற திருப்பாற்கடல்போல விளங்கி அவர்களோடு சென்றனள். முனிவர்காள், இராவ ணன் கும்பகன்னனுகிய விருவரும் பிரமவித்து வாகையா லவர்களைக் கொன்ற ஸ்ரீராமனுக்குப் பிரமகத்திதோஷம் பற்றியது. மேலும் ஸ்ரீவிஷ்ணு அவதாரமாகிய ஸ்ரீராமச்சந்திரன் உலகத்தாருய் யும் பொருட்டே பிர்மனுமிங்குசெய்யும் லிங்க ஸ்தாபன மகத்வத்தைச் சொல்வதற்கியலா அத் துணை மகிமைப் பிரதாபமுடைய சிவலிங்கப்பெரு மானை முத்தித்தானமாகிய கந்தமாதனத்திலே பிரதிஷ்டை செய்தானல்லது தன்னலங்கருதியல்ல வாதலால் பிரதிட்டைச் சரித்திரத்தைச் சொல்லு துங் கேட்பீர்களாகவென்ருர் சூதமாமுனிவர்.

சிவலிங்கப் பிரதிஷ்டை.

புண்ணிய மயமாகிய ஸ்ரீசேதுவிலே சீதா சமேதராய் தீர்த்தமாடி எழுந்த ஸ்ரீ ராமச்சந்திரன் கந்தமாதன மலையையடைந்து அங்கு கூடியிருக்கும் தவசிரேட்டர்களை வணங்க அகத்தியர் முதலிய முனிவர்கள் மனமகிழ்வுற்று சொல்வார்கள், ''சத்தியவிரதனே; உலகவேந்தனே, ஸ்ரீராமனே, நீ நினைப்ப மிக நன்று. முத்தித்தானமாகிய இந்தக் கந்தமாதனத்திலே உலகத்தாருய்யும் பொருட்டுச் சிவசத்தி சாநித்தியமாகுஞ் சிவலிங்கப்பெருமானைப் பிரதிட்டை செய்குதி. உன்னையடுத்த பாவங்களனைத்தும் நீங்கும். பிரமனு மிங்கே செய்யு மிலிங்கதாபனமகத்துவஞ் சொல்லமாட்டானென்றால் மனுடர்கள் எப்படிச் சொல்வார்கள். காசியிலிருந்து லிங்கத்தை வரவழைத்துத்தாபிக்கின் கோடிமடங்கதிக பலனுண்டாகும், அதனைத் தரிசிப்பாருக்கும் பெரும் பேறுளதாகும். இந்நகர முனதுபேரால் இராமேச்சுரமென்றும், இவ்விலிங்கம் இராமனுதனென்றும் இராமலிங்கமென்றும் வழங்குக. அண்ணலே, நீ இதுவிரைந்து செய்குவையேல், அது இருவினைக்காட்டுக் கெரியாகும்'' என்றனர்.

சீதாபதி அதனைக்கேட்டு முனிவர்களோடு கூடி மனமகிழ்ந்து இரண்டுநாள்வரையுஞ் சிவத்

தியானஞ்செய்து, ஞானதிருட்டியினு லிங்கே யிவையிவை யின்னவின்ன விடத்திலே செய்யத் தக்க தென்ருய்ந்து சங்கற்பித்து, வடகயிலேயி னின்றுஞ் சிவலிங்கப்பெருமானை வரவழைக்கும் நோக்கமாகச் சகல சாமர்த்தியத்திலுஞ் சிறந்த அநுமானை நோக்கிச்சொல்லுவான், "அஞ்சனு தேவியினது கண்மணிபோன்ற செல்வக்குமாரனே, நீ உத்தரகயிலேயிற்சென்று சிவப்பிரதிட்டை செய் தற்கு இன்றியமையாத சிவலிங்கப் பெருமானை வருவிக்க விரைந்து செல்லுதி" யென்றனன். வாயு புத்திரனுகிய அநுமானு மதுகேட்டு மனமகிழ்ந்து அவனது பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து, அங்ஙனஞ் செய்வேனென்றெழுந்து விடைபெற்று கந்தமாதன மலே நிலத்திலே குழிந்தாழும்படி யூன்றி யெழுந்து ஆகாய மார்க்கமாகச் சென்று திருக்கயிலாயமலையை யடைந்து சிவத்தியானத் தோடு தருப்பாசனத்திலே கிழக்குநோக்கியிருந்து கைகுவித்துப் பஞ்சப்புலன்களேயுந் தத்தம்விஷயத் திற் செல்லாது தடுத்து மௌனமாகி உபவசியா யிருந்து அருந்தவமிழைத்துச் சிவானுக்கிரகத் தாற் சிவலிங்கத்தைப் பெறும் துறையிலீடுபட் டிருந்தான்.

முனிவர்கள் ஸ்ரீராமனை நோக்கி, "ஸ்ரீராம னே, ஆனி மாதத்திலே பூருவபக்கத் தசமியும் புதன்கிழமையும், அத்த நட்சத்திரமும், வியதீ பாதநாமயோகமும், வணிசகரணமும், தசயோக

மும் இடபலக்கினமுங் கூடியதாக நாங்குறித்த சுபலக்கினமோ வந்தது. சிவலிங்கப்பெருமானை வருவிக்கச் சென்ற அனுமானை யின்னுங்காணேம், இந்தச்சுபலக்கினந் தவறுமாயி னெதுவுஞ் சித்திக்காது. ஆதலின், சீதாபிராட்டி விநோதமாகச் செய்த சிவலிங்கப் பெருமானையே பிரதிட்டை செய்குதி" யென்றனர். வில்லாசிரியனாகிய ஸ்ரீராமன் அதனைக்கேட்டு "அதுவே சிறந்தது; அங்ஙனமே செய்வே" னென்று முனிவர்கள் தேவர்கள் சீதாபிராட்டி இலக்குமனுதியோரோடும் பெருமகிழ்ச்சிகொண்டெழுந்து ஸ்நானஞ் செய்து, நித்தியகருமாதிகளை முடித்து விபூதி உருத்திராக்கந் தரித்து இரக்ஷாபந்தனமிட்டுச் சிவப்பிரதிட்டைக்கு விதித்த விதிகளைச்செய்து, சிவமந்திரங்களால் நியசித்துத் தன்னைச் சிவமாகப் பாவித்துத் தனது இருதயத்தினின்று கங்கையணிந்த சடாமுடியும், ஞானசந்திரப் பிரபையும், சருப்பச்சரட்டிற்கோர்த்த தாமரைமலர்வாசமும், பஞ்சவர்னங்களின் பேரொளிவீசும் ஐந்துமுகங்களும், சோமசூரியாக்கினியாகிய திரிநேத்திரங்களும், சருப்பகுண்டலமணிந்த திருச்செவிகளும், காளகண்டமும், பத்துவித ஆயுதங்களோடு சருப்ப கங்கணமணிந்த பத்துத் திருக்கரங்களும், தான் மீளாவடிமையென்பதை யுணர்த்து மாயையோடு பன்றிக்கோடுகள் வரிசையாக மாலைபோலத் தொங்குந் திருமார்பும், நஞ்சையுமிழும் வெண் பற்களையுடைய சருப்பக்கச்சிறுக்கிய புலித்தோ

லாடை தொங்குமிடையும், வீரக்கழலும், தேவர்களது முடித்தழும்பும், தான்சாத்திய கண்மலருங் கிடங்கொளிருந் திருவடியும், முத்துவடமணிந்த தனங்களையுடைய மலர்வளர்காதலி நீங்காத இடப்பாகமும் ஆகிய சிவருபத்தைத் தனது அஞ்சலியத்தினு லெடுத்துச் சுழிமுனைவழியாகத் துவாதசாந்தமட்டுங் கொண்டுபோய்ச் சோதிமயமாக மந்திரருபமாகித் தனது அஞ்சலியில் வந்ததாகப் பாவித்துச் சத்தியோசாத மந்திரத்தினுலே, பிராணப்பிரதிட்டை முதலிய செய்து தாபித்தனன். அச்சிவலிங்கப் பெருமானுக் கபிடேகஞ் செய்யும்பொருட்டு, அவரது சந்நிதானத்துக் கைசானியத்திலே தனது வில்லின் கோடியினுலே ஒரு கூபத்தை யுண்டாக்கிக் கோடிதீர்த்தமெனப் பேர்கொடுத்து, அவரது சந்நிதானத்திலே பசுருபமாகிய இடபதேவரையும் பிரதிட்டைசெய்து அச்சிவலிங்கப் பெருமானுக்குப் பூசைசெய்வானுயினன்.

ஸ்ரீராமனுனவன், இராமலிங்கப்பெருமானுக்கு எண்ணெய்க்காப்பு பஞ்சகவ்வியம் தேன் பழவகைகள் இளநீர் முதலியவற்றினுலும் இடையிடையே கோடிதீர்த்தத்தினுலும் வேண்டியவாறு அபிடேகஞ்செய்து, திருவொற்றுடை சாத்திப் பீதாம்பரமுடுத்தித் தானன்றுதேடிக் காணுத திருவடியைக்கண்டு மலர்ந்த முகமுடையனுகிப் பாத்தியமும், பஞ்சமுகங்களுக்கும் ஆசமனமும்,

சிரங்களுக்கு அருக்கியமுங் கொடுத்துக் குங்குமக்குழம்பும் திருமுடி ஆரமாதிய திருவாபரணங்களுஞ் சாத்தி, அறுசுவைகூடிய திருவமுதை நைவேதித்துப் பானீயங்கொடுத்துத் தூபதீபங் காட்டிச் சோடசோபசாரங்கள் செய்து வேதாகம விதி பிறழாது செய்யவேண்டியவைகளனைத்தையுஞ் செய்து, பஞ்சாட்சரத்தை நூற்றெட்டுருச் செபித்து நானுதிகங்களைப் போக்கிப் பூசாபலனையுந் தத்தஞ்செய்து அக்கினிதிக்கிலே குருபீடமும் மேற்கே யோகபீடமும் வித்தியாபீடமும் பூசித்துத் தத்துவத்திரையஞ் சாத்தி வேதமந்திரங்களினுலே தோத்திரஞ்செய்து மூன்றுதரம் பிரதக்கிணஞ்செய்து சன்னிதானத்திலே அன்பினுற் கைகொட்டிக் கூத்ததாடி ஆநந்தக்கண்ணீர் சொரியுமாறு பரவசமாய் நின்றனன்.

இங்ஙனம் பக்திவெள்ளத்தில் மூழ்கி நிற்கும் ஸ்ரீ ராமச்சந்திரனின் மெய்யன்புக்கடிமையாகி சாட்சாத் ஸ்ரீகைலாசபதியானவர், சீதாதேவியால் பிடிக்கப்பட்ட மணல் லிங்கத்தில் கோடிசூரியப் பிரபை யெழுவதுபோல் மான்மழுசதுர்புஜ காளகண்ட திரிநேத்ர தாரியாய் பராசக்தியாகியபார்வதி தேவியோடு பிரசன்னமாகி ஸ்ரீராமனே, வருக என்றருட்பாலிக்கவே ராமமூர்த்தியை பீடித்திருந்த பிர்மஹத்தியானது கார்மேகத்தை யொத்த நிறத்துடன் பயங்கரமான கோடையிடியை யொத்த பேரிரைச்சலிட்டுக்கொண்டு வெளியே

ஓட்டம் பிடிக்கலாயிற்று.

இவ்விதம் ஓடும் பிர்மஹத்தியைப் பார்த்த சிவபெருமானனவர் அதை ஓடிப்போய்விடாமல் காளபைரவரை ஏவிப்பிடித்து அவ்விடத்திற் றுனே ஓர் பிலத்துவாரத்திற்றள்ளிப் புதைத்ததுக் தவிற சுவான வாகனனுகிய வைரவரையும் அங்கு ஸ்தாபித்து காவலில்வைக்கவே பிர்மஹத்தியும் வலிகெட்டொழிந்தது.

பிர்மஹத்தி தோஷத்தினின்றும் நிவாரண மடைந்த ராகவன், ஸ்ரீராமநாதா வென்று நித்ய வஸ்துவாகிய சிவபிரானை அழைத்தான். தார்க்கிகர் கள் தேவரீரது செயல்களை இன்னதென்றுணரா மல் காரியங்களுக்கெல்லாம் அணுவே முதலென்று வாதிப்பர். அதுவும் நீயே யென்றுணர்ந்த என்னை ஆண்டருள். என்றான்; பிரபஞ்சப் பொருள்களை எல்லாம் என தென்று நினைத்து நடக்கும் எனது குற்றத்தை நீக்கி திருவடிதந்தாளுக, சம்புவே என்றடியற்ற மரம்போல் ஈசனின் பாதகமலங் களில் வீழ்ந்திறைஞ்சினன்.

ஸ்ரீராமலிங்கப் பெருமானும் ஸ்ரீராமனிடத் திலே திருக்கண்சாத்தி ரகுநந்தன! கேட்குதி, கந்தமாதனச் சாரலிலே சேதுவினடிமூலத்திலே நீ பிரதிட்டை செய்து கோடிதீர்த்தத்தினலபி ஷேகித்து பூசித்த இந்த லிங்கத்தை யாவர் தெரிசிப்பார்களோ அவர்கள் முன்னீட்டிய பாவங்

களனைத்தும் நீங்கி புண்யாத்மாக்களாவார்கள் தனுஷ்கோடியில் சென்று விதிப்படி ஸ்நானமாடி இராமலிங்கத்தை தெரிசிப்பவர்கள் இம்மையில் அஷ்டலட்சுமி கடாட்சத்தையும் சம்பூரண ஆயுளையும் பெற்று மறுமையில் நம்மோடு ஒன்ருய் கலந்து சிவமாகி நிற்பர். இது சத்யம் என்றருளினர்.

இங்கிவ்வண்ணம் சிவானுக்ரகம் ஸ்ரீராம சுவா.மிக்கு பிறந்துகொண்டிருக்கும்போது சீதா பிராட்டி, லக்குமணன், அனுமார், சுக்ரீவன், விபீஷணன், அகத்தியர், பிருகு முதலிய சிரேஷ்டர்கள், கோடானுகோடி தவம்புரியினுங் கிடைத்தற்கரிய பரப்பிர்ம சிவதெரிசனத்தை மெய்குளிர கண்டு களித்த சந்தோஷத்தால் சப்தசாகர வொலிபோல ஈஸ்வரனை ஸ்தோத்திரஞ் செய்யலாயினர். சடையிலணிந்த கங்கையையும், சந்திரனையும், நெற்றிக்கண்ணையும், காளகண்டத்தையும், வாகுவலயத்தையும், தெய்வக்கொன்றைச் சரத்தையும், மதயானைத்தோற்போர்வையையும், அரையிலுடுத்த புலி ஆடையையும், தாமரை மலர்போலுமுபய திருவடிகளையும் உமாதேவி பாகத்தையும் கண்டு தரிசித்த தங்கள் தங்களின் பாக்யத்தை வியந்தும் இதனைக்காணுதாரின் எளிமையை இகழ்ந்தும், ஆனந்தபோதத்தால் கைகொட்டிக்களித்துப் பரவசராய் அன்புருபிகளாயினர்.

காசிக்ஷேத்ரத்துக்கு லிங்கம் கொண்டுவர சென்ற அனுமச் சருக்கம்.

இங்கே இங்ஙனமாக, அனுமான் இரண்டு சிவலிங்கப்பெருமானை யெடுத்துக்கொண்டு திருக்கயிலாயத்தினின்றும் நீங்கி விரைவாகக் கந்தமாதன மலைச்சாரலிலே வந்து ஸ்ரீராமனையும், இலக்குமனையும், சீதாபிராட்டியையும், சுக்ரீவனையும் வணங்கி, நடந்த சங்கதிகளொன்றுந் தெரியாமல் உற்று நோக்கிச் சீதாபிராட்டி கூட்டிய திருமணலையே சிவலிங்கப்பெருமானாக வருவித்து ஸ்ரீராமன் பிரதிட்டை செய்து பூசித்திருப்பதைக் கண்டு அடங்காத கோபங்கொண்டு, நாணமுற்று, "நாம் வீணே சென்றுலைந்து வருந்தினோமே" யென்று வெம்பி வெடித்துக் கண்ணீர் சொரிய நின்று சாங்கமாட்டாது ஸ்ரீராமனை நோக்கிச் சொல்லுவான் "ஓ சீதாபதியே, யானெடுத்த இப்பிறப்பு துக்கத்தின் பொருட்டன்றி, இப்பிறப்பாற் சுகமொன்று மடைந்திலேன். கொம்பர்களின் வசிக்குங் குரங்கு எவ்வாறு பெருமையடையும்! அன்றியும் அமரர்களாலும் அரக்கர்களாலுமளவுபடாத துன்பத்தையடைந்த வென்னைத் தந்தை

தாய் தனையரும் விரும்பார்கள். தாரமானவர்களு மயங்காராயின் இப்பிறவியே எல்லையில்லாத கவலைக்கிடமாயிற்று. முன்பு திருவடித்தொண்டிலும் பின்பு பேரமரிலும் பெருவருத்தமுற்றேன். அன்பிலாத அன்னையினுக்கொப்பாகிய நீ, யாவருமென்னை யவமதிக்குமாறு செய்தனை. யானுனக்குச் செய்த குற்றம் யாது? சுக்ரீவன் பெண்ணாசையினாலே தமையனைக் கொல்லுவித்து நின்பின் றிரிந்து முழுகின்றான். விபீடணனும் பூமியை அரசாளும் விருப்பத்தினாலுனதுபின் றிரிந்துழலுகின்றான். ஸ்ரீராமனே, நானொ தனை விரும்பி நின் பின் றிரிந்துழன்றேன். என்னை இவ்வாறு துயரப் படுத்த நினைத்தோ இந்த வீரர்களனைவரும் உனது ஏவலின் வழிநிற்க, என்னைத் "திருக் கைலாயஞ்சென்று சிவலிங்கங் கொணருதி யென் றனுப்பியது. யான் விரைந்து ஆகாயமார்க்கமாகச் சென்று திருக்கைலாய மலையையடைந்து சருகுணவுகொண்டு தவங்கிடந்து தோத்திரஞ்செய்து சிவலிங்கப்பெருமானைப் பெற்றுவந்தேன். இதில் நானனுபவித்த கட்டத்தை யொருசிறிதுஞ் சிந்தியாது, மாறுபடச்செய்த நின்றிருவுளமறியேன். மணலிங்கத்தை யாவர் தரிசிக்கப் பிரதிட்டை செய்தனை? இதற்கியானென்ன சொல்வது. இனி இந்த மூர்த்திகளை யானென்ன செய்வது! பூருவசன்ம தபோபலமில்லாதவன் ஒரு செயலைச் செய்வானாயின் அது சித்தியாகாத அளவேயன்றி அவமானமுமடையவன்' என்ற மூதுரைக்கிலக்கா

னேன். சீதா யானென்னசெய்வேன்! எங்குச்செல்வேன்! இந்த அவமானத் தாங்கமாட்டேன்! என் வருத்தமொருவாறிருக்க, இப்புண்ணிய பூமியானது பாபியாகிய வென்னையும் சுமக்கின்றதே என்ற வருத்தம் மேலோங்குகின்றது. ஸ்ரீராமா, உன்னாற்கிடைத்த அவமானத்தைப்பெற்ற இவ்வுடலைச் சுமக்கேன். ஆயின், உனது திருச்சபையோர் களிக்குமாறு யான் இறந்தொழிவதே உன்னிடத்து யாசித்துப் பெறுவது'' என்று சொல்லி யழுது புலம்பித் திருவடிக்குமுன் வீழ்ந்து புரண்டனன்.

ஸ்ரீராமன், அனுமான் தன்னடியில் வீழ்ந்து தாங்காத் துயரமடைவதைக் கண்டு, அவனது மனந்தேறும்படி சில வார்த்தைகளைச் சொல்லுவான். ''அனுமானே கேட்குதி, யான் எனது நிலையையும் பிறவுயிர்களது நிலையையுமறிவேன். யானறியாதது ஒன்றுமில்லை. திரிகால சம்பவங்களையு மறிவேன். மாருதியே, சீவான்மா ஒன்றே பூருவசென்மவினைப் போகங்களை யனுபவித்தற்காகப் பிறந்து அவை முடிந்துழியிறக்கும். அடங்காத கன்மங்களைச் சொற்கநகரங்களிலனுபவிக்கும். பரமான்மாவாகிய பரம்பொருள் நிர்குணமாய், சோதிச்சுவரூபமாய், ஒன்ருய், தொடர்பில்லாததாய், ஆண் பெண் அலியாதிய குறியீடுகளில்லாததாய், நிராதாரமாய், வேதனைவிகாரங்களற்றதாய் விளங்குந் தலைமையுடையதென்றறிகுதி

'அகம்பிரமாஸ்மி' என்ற நிலையிற்றவறி மெய்ஞ் ஞான வழிக்கு அருகமாயிருக்கும்படியாய் வழியை தடுக்கும் அகங்காரத்தையொழிகுதி. பிறவுயிர்கட் கின்னுசெய்தலை யொழிகுதி. விருப்பத்தோடு தரு மஞ் செய்குதி. தீயார்கூட்டத்தை விடுக்குதி. புலன்களை யவற்றின்வழி செலுத்தாது தடுக்குதி. புறங்கூறுதலை யொழிகுதி. சிவாதிதேவர்களை வழிபடுகுதி. உண்மையே பேசுதி. அகமும் புறமு மடியுமுடியும் ஞானவடிவாகிய சைதன்யத்திலே பிரிவின்றி நிலைக்குமறிவில்லாமையினுல் உலகமயக் கப் பொருள்களின்மேல் ஆசையுண்டாகியெழுந்த பிராந்தியினுலே நல்லசெயல்களனைத்துந் தீயன வாகத் தோன்றும். கற்பனுசங்கத்திலே பொருள் விருப்புண்டாகும். அவ்விழைவினுலும் வெறுப் பினுலும் தர்பாதர்ம முண்டாகும். அவற்ருற் றேவர் மனுடர் நரகாதி பிறவி பேதங்களுண் டாகும். மாருதியே நீ யிவற்றைச் சிறிதுஞ் சிந்தி யாது துன்பமடைதல் யாதாகும். சந்தனம், பச்சைக்கருப்பூரம், அகில், புழுகு, கஸ்தூரி யாதிய வாசனுதிரவியங்களா லழுக்கடைந்த விவ் வுடம்பு தனது துற்கந்தஞ் சிறிது மாறினு நீ துற்கந்த திரட்சியாகிய வுடம்பு சத்துக்களாலே மதிக்கத்தக்கதோ! சருக்கரை பழவகை தேனுதிய சுத்தவஸ்துக்கள் இவ்வுடம்பிற் புகுந்தன்ருே தீயநாற்றத்தையுடைய மலமாகின்றன. நறுநாற் றத்தையுடைய பால் இளநீராதிய சுத்தப்பொருள்

கள் இவ்வுடலிற் புகுந்தன்றோ உவர்நீராக வருகின்றன. சுத்தமாகிய வெள்ளை வஸ்திரம் இவ்வுடலினுடுக்கப்பட்டன்றோ அழுக்கடைந்து நாறுவது. ஆதலினால் பெரியோர்களிவ்வுடம்பு கழியும்வரையுஞ் சுமத்தற்கு நாணுமலிதிற் களிப்படைவரோ. மாருதியே, இன்னுமுண்மையாகச் சொல்லுகின்றோம், வினைவலியினாலே புலன்களு மோவ்வொன்றாக நித்திரையின்றி வந்து கூடியலைக்கும் திரிகரணங்களின் றடுமாற்றத்தினாற்பொய்வினைகளைச் செய்திளைக்காத சிறைச்சாலையாகிய இவ்வுடம்பினாற் பெறுமின்பம் யாது. ஊறிப்பாய்கின்ற சுக்கில சுரோணி தக்கலப்பாற் றிரண்டு வேறு வேறு உறுப்புகளாய், பால தருணனாகி வளர்ந்த சரீர மொடுங்கித் திரங்கித் தள்ளாடு நிலைவந்தால் மரணமாகாதோ. இந்தப்பிறப்பினாற் றுன்பமன்றி யின்பமொரு சிறிதுமில்லை. கடந்த பிறப்பிலும் வருபிறப்பிலும் வருவது துன்பமாயின், ஜனணத்திற்கு யாவராஞ்சார். பிறவிக்குருடன் பின்னேரிடத்துச் செல்லும் வழியில் வருங்குழியில் விழுந்து எழுந்துபோய் மீண்டும் வரும்பொழுது மக்குழியில் விழுந்து வருந்துவதுபோல மரணசனனத்தினாலுயிர்வருந்துவதே. அவையொழிந்தாலன்றி யின்புறுவதெங்ஙனம். மாருதியே, பிறவிக்கேதுவாகிய பாசந்திருவருளாகிய கதிரானழிவதன்றிப் பிறிதொன்றானழியாது. இதைச் சுத்தவேதாந்த ஞானமே வெளிப்படையாகச் சொல்லும். அது

யாவராது மனதையுங் கவருகின்ற மூன்று மகா வாக்கியங்களினு லுண்டாகும். அரிய கலைகளை யறிந்த் ஞானுசாரியானது சட்சுதீக்ஷையினுலே இப்பியில் வெள்ளிபோல விபரீதமாய்ப் பிரகாசித்த சகமுழுதும் சருவசங்க பரித்தியாகமாக நசிக்கப் பட்டு வெள்ளியென்னும் பிராந்தியற இப்பியாகத் தோன்றுவதுபோல, பொய்யென்பது திடமாகும். இந்த உண்மைஞானம் பிறவாமல் விலாப்புடைக் கப் பேருணவுகளை யுண்டு பிரமஞானமாகிய கிரியைகளொன்றையுந் தொடங்காமல் உறங்கி விழிக்கும் அவிவேகிகளை இயமனே கைக்கொள் ளுவன். இடையே பற்றிச் சூழ்ந்தவைகளனைத் தும் பிரியும். தோற்றியவனைத்து மொடுங்கும். உயர்ந்தவைகளனைத்துந் தாழும். மாடமாளிகைக ளனைத்தும் பாழுங்குழியாகும். பழுத்தபழம் விழு மானுல் எடுத்தசரிர மிருக்குமோ! இன்று என்ப தழியுமானுல் நாளையென்பதழியாதோ! இந்தமாத மோடுமானுல் பிறக்குமாத மிருக்குமோ! இவ் வாண்டு செல்லுமானுல் எதிராண்டுசெல்லாதோ! இது புதிதன்றே. ஆதலால், மரணம் நிச்சயமே. நாங் காடுகளிற் புகினும் மலைமுழைஞ்சில் நுழை யினும், எவ்வளவோ சேய்மை நிலத்திருப்பினும், பெருங்கடலுண் முழுகினும் மரணகாலம்வரின் சிறிதுந் தடைபடாது. மாருதியே, நமதுறவின ரும், நாமிருந்த நாடுநகர் வீடுகளும், நமதென்று கொண்ட மனைவிமக்களும், திரையடிக்கும்போது சேர்ந்தும் பிரிந்துமோடுந் திருணம்போலவும்,

வழிச்செல்வோ ரிடையிற் கலந்தும் பிரிந்தும் போவது போலவுஞ், சேருங்காற் சேர்ந்தும், பிரியுங்காற் பிரிந்தும் போகுமேயன்றி நிலைக்குமோ. இதற்கேது பரிகாரம். உயிரானது பெருங்கடற் பிரவாகம்போலச் செய்துகொண்ட வினைக்குவைகளினாலே நெடுங்கால மோரிடத்தி னிலைப்பதில்லை. சுவர்க்க மத்திய பாதலங்களி லெங்கே யனுபவ மிருக்குமோ அங்கே தங்கும். ''வினைப்போக மொழியிற் றினைப்போதுமிரா'' என்றபடி பின்னனுபவமுள்ள விடத்துச் செல்லும். இதுவே யுண்மை. மாருதியே, தன்னைத் தானுணரிற் றனியன்றி வேறு சகசமில்லையென்றறிந்த நீயு மிதனைக் குறித்து வருத்தமடைவையோ. ஆ! ஆ! இது பெருமயக்கம். வேதாந்தமுடிவிலே நின்ற ஏக வஸ்துவைச் சதாத்தியானஞ்செய்குதி. யான் செய்தேன், பிறர் செய்தாரென்பது இல்வழக்கன்றி யுண்மையன்று. அது இரத்தசம்பந்தத்தா லாளிதாயினு முற்று நோக்கின் வேறும். ஆதலின், யான் பிரதிட்டை செய்த சிவவடிவம் நீ செய்ததே. இதற்கு வருந்துவது புத்தியல்ல. மாருதியே, உன்னோடு வேற்றுமைகொண்டு செய்தேனெல்லேன். குறித்த சுபலக்கினம் வந்தமையால், அது நமது சௌகரியத்தைக் காத்திருக்காதாகையால், சீதாபிராட்டி கூட்டிய மணலையே சிவலிங்கமாகக்கொண்டு பிரதிட்டை செய்தேனிஃதுண்மை. அன்றி, உன்னையவமதித்து இது

செய்தேனென்று சினக்காதே. நீ கொணர்ந்த சிவலிங்கத்தைப் பிறிதிடத்திலே நின்பெயராற் சுபதினத்திலே பிரதிட்டைசெய்குதி. நீயு மனேக மிராக்கதரைக் கொன்றனை. அப்பழி கழியுமாறு சிவார்ச்சனை செய்குதி நீயருச்சித்த அனுமேசு லிங்கத்துக்கே முதற்பூசையும் வணக்கமும் செய்து பின்பு நமது இராமலிங்கத்துக்கு அருச்சனை வழிபாடு நடத்துக. நீயருச்சித்த சிவலிங்கத்தைத் தரிசிப்பார்க்குப் பேய் பூத வேதாளங்களடையாது. நன்மோட்சமுண்டாகும். இவ்விரண்டு சிவபெருமானையும் யோசனைதூரத்துக்கப்பாலிருந்து நினைப்பாருக்கு, இட்டசித்திகளனைத்துங் கைகூடிப் பாசங்களொழிந்து மோட்சமுண்டாகும். அவர்கள் தவம் யாகஞ் செய்யவேண்டியதில்லை. இவ்விரண்டு இலிங்கத்தினுமன்றி இலக்குவன் சீதை சுக்ரீவன் நளன் சாம்பன் அங்கதன் நீலன் அனந்தன் விபீடணன் ஆதியோர் தங்கடங்கள் பேரினுற் பிரதிட்டைசெய்த சிவலிங்கமூர்த்திகளிடத்திலே சிவபெருமான் என்றுஞ் சாநித்தியராவர். அன்றியும், என்னாலருச்சித்த இராமலிங்கந் தாபித்த முகூர்த்த வலிமையினுல் சத்தபாதாள லோகங்களையு மூடுருவிக் கீழ்ச்சென்று வேரூன்றியது. அருணாசலமலையினடியைக் கண்டாலும், மேருமலையை யசைத்தாலு மிதனடியைக் காணவு மசைக்கவும் முடியாது. உனக்கு வலியிருக்குமாயின், பிடுங்கிவிட்டு நீ கொணர்ந்த லிங்கத்தைப் பிரதிட்டை செய்குதி" என்றருளினன்.

அனுமானு மதுகேட்டு மனது சற்றேயாறி, இராமனுதனே யெடுத்துப் பிறநிடத்திலே வைக்கவுந் தான் கொணர்ந்த சிவலிங்கப் பெருமானை அவ்விடத்திலே தாபிக்கவும். விரும்பிப் பெருமகிழ்ச்சியோடெழுந்து அனைவருங் காணும்படி தனதிருகைகளாலுஞ் சிவலிங்கப் பெருமானை யசைத்தனன். மனவலியோடு பலகாலசைக்கவு மஃது சிறது மசையாதிருக்கக்கண்டு, பின்னும் பேரொலிசெய்து மார்பை நிமிர்த்தி வாலேக்கிழுப்பி யசைக்கவு மசையாதாயிற்று. அதுகண்ட பலருஞ் ‘‘சீதாபிராட்டி கூட்டிய மணற்கும்பமே ஸ்ரீராமனது அன்பினுலும் முகூர்த்த பலத்தினுலுஞ் சிவானுக்கிரகத்தினுலும் பக்கங்களோடு மசைந்தொன்றுகியது. அனுமானசைத்தெடுப்பதற் கிஃதென்ன மருத்து மாமலேயோ‘‘ வென்றனர். அனுமானதுகேட்டுப் பெருங் கோபமடைந்து; தனது வாலினுற் சிவலிங்கத்தைப் பலமுறை சுற்றித் தோள்களே நிலத்திலே யூன்றிப் பெருவிசையோடு மேலேதொங்கி யிழுத்தலும், உலகமுழுதும் நடுங்கியது. சிவலிங்கமொருசிறிதும் மசைந்திலது. பூட்டிய வாலறுந்து மேருமலேயின் சிகரம் விழுந்தது போலக் கூப்பிடுதூரம்போ யிரத்தஞ் சொரிய விழுந்து இர்த்தக்குழியி லமிழ்ந்தினன். அதுகண்டவர்க ளனைவரும் சித்தசித்துப் பிரபஞ்சங்க ளனைத்தும் கலந்திருக்குஞ் சிவபெருமானது மகிமையையுக் அவரைத் தாபித்த ஸ்ரீராமனது அன்பையும் புகழ்ந்தனர்.

தேவர்களும் முனிவர்களும் அனுமானது நிலையைக்கண்டு வருந்தினர். ஸ்ரீராமனும் இலக்குமனும் சீதையு மற்றையோருங்கண்டு மனநடுங்கிப் பதைபதைத் தழுதனர். ஸ்ரீராமன் பின்பு அனுமானைக் குழியினின்றுந் தூக்கி மடியில் வைத்து அவனது சரீரத்திலுள்ள இரத்தத்தைத் துடைத்து "அஞ்சனைக்கினியவருமகனே, வாயுகுமாரனே, பம்பையாற்றங்கரையிலே எனது கவலையொழியுமாறு தெளிவித்துச் சுக்ரீவனோடு நட்புறச்செய்தவன் நீயன்றோ! அந்தநாள்முதலெம்மைத் தந்தைதாயாக வுட்கொண்டு கடல் தாண்டினையன்றோ! சுரசை சாயையென்பவர்களை கொன்றது யார்பொருட்டோ! கடலைக் கடந்ததுங் காரிருளில் இராக்கதர்கள் சஞ்சரிக்கு மிலங்கை முழுதுக் தேடிச் சீதையைக் காணுதேங்கி யிளைத்ததும், பின்னசோகவனத்தை யடைந்து கண்டு அவள் தேறும்வண்ணம் மோதிரங்கொடுத்துச் சூடாமணியை வாங்கிவந்து என்னைத் தெளிவித்ததும் நின்பொருட்டோ! அதுமட்டோ, இராவணனை நிகர்த்த எண்பதினாயிரம் இராக்கதர்களையும் பிருகத்தனுடைய மகன் சம்புமாலியையும், பல படைத்தலைவர்களையும், அமாத்தியர்களது புத்திர ரெழுவரையும், சதுரங்க சேனைகளோடு மட்சயகுமாரனையும், வதைத்து, இராவணனை வை[illegible] காட்டும் பொருட்டே இந்திரசித்தினாற் கட்டுண்டு அவன் முன்னிலையிற் சென்று, வேண்டியபடியவனை வைத்து பின்னவனன் இலங்காபுரி

முழுதும் நெருப்புமூட்டியதும், இன்னுமென்னைக் குறித்து நீபட்ட கட்டங்களை நேரே கண்ட யானுன்னை மறப்பேனே. பிரதியுபகாரங்கருதாது பெருந்துன்பமடைந்த நீ மரிக்கின் யானுயிரோடிருப்பேனே. நீ யிறப்பின், சீதையையு மிலக்குமனையு மெனக்கு யாதுக்கு. கண்ணிழந்தவனுக்கு பிறவுறுப்புகளாற் பயனற்றவாறுபோல நீ யிறக்கின் மற்றையோராலென்னபயன். சுக்கிரீவனாதியோர் வாட்டமுற உன்னையிழந்து பின் நாணமின்றி முடியும் புனைவேனே. கனிகாய் கிழங்கு முதலிய உணவுகளையுண்ணுமற் சரீரம் மண்படத் தக்கதாக ஏன் கிடக்கின்றனை. அன்றமுத சஞ்சீவினி கொணர்ந்து உயிர்காத்த தோன்றலே, யான் ஸ்நானஞ்செய்யப் புகும்போது தண்டுகமண்டல தருப்பையாதி கொண்டுவருவையே. அரக்கரகந்தையுஞ் சீதை துயருமகற்றிய வள்ளலே, யானுனது புயவலிகொண்டன்றோ அரக்கரை வென்றது. சீதையைச் சேர்த்தமைபோலத் தம்பி பரதனோடென்னைச் சேர்க்காதொழியின், நின்னை யுலகத்தவரென்சொல்வார்" என்றின்னோரன்ன பலவுஞ் சொல்லிப் புலம்பிக் கண்ணீரினாலனுமானது சரீரக் கறையைக் கழுவினன். ஸ்ரீராமனது கண்ணீர்பட்ட புண்ணிய விசேடத்தால் மாருதியானவன் இராமலிங்கப் பெருமானுக்குச் செய்த அபராதநீங்கி யறிவுகொண்டெழுந்து ஸ்ரீராமனைக்கண்டு, சீதாபிராட்டியு மிலக்குமனு

மற்றைய குரக்குவேந்தருங் களிப்படையத் தோத்திரஞ் செய்வான்.

"ஆதிநாராயணனே, தண்டபாணியே, கடல்வண்ணனே, சருப்பசயனனே, பிதாமகன் றந்தையே, சகலலோகநாதனே, அரக்கரரியே, சீதாபிரானே, மாதவனே, பத்தசகாயனே, சங்கு சக்ரபாணியே, மற்சாவதாரனே, கூர்மாவதாரனே, வாமனனே, நாரசிங்கனே, இரணியாட்சகனே, பலராமனே, ஸ்ரீராமனே, அகலிகாசாப மோசனனே, தாடகாசங்காரனே, வாலிமோசனனே, கோபாலனே, தசரதகுமாரனே, சுத்தநிராமயனே, காயாவண்ணனே, பரிபூரணனே, தேவாதிபனே, உனக்கு வணக்கம். அவத்தாத்திரயத்தினுமாள்பவனே, யுனக்கு வணக்கம். தேவரீரது புகழை யாவர் சொல்லுவார். தேவரீரே என்னைக் காத்தருளுக". என தோத்தரித்தாள்.

ஸ்ரீராமன் சீதாபிராட்டியோடு அனுமான் சொல்லிய தோத்திரத்தைக் கேட்டு மகிழ்ந்து, அனுமானைநோக்கிச் சொல்லுவான். "அன்பனே, அஞ்ஞானத்தாலே யடாதசெயலைச் செய்தனை, முப்பத்துமுக்கோடி தேவர்களாலும், இந்திரன் பிரமன் விட்டுணுவாலும், மற்றை யாவர்களாலும் நானிவ்விடத்திலே பிரதிட்டை செய்த சிவலிங்கத்தை யசைக்கமுடியாது; நீயே னிதற்குத் துணிந்தனை. யாங்களனைவரும் வருந்தும்படியாக

யுத்தஞ்செய்த பெருமையையுடைய இராவணன் திருக்கைலாயமலையை யெடுத்துப் பட்டவேதனையைக் கேட்டறிந்ததில்லையோ. மாருதியே, முன்னொருகாலத்திலே தேவர்களது அகங்காரத்தை யொழிக்கும்பொருட்டுச் சிவபெருமான் ஓர் துரும்பை நிறீஇ 'இதனை யசையுங்க' ளென்று சொல்லியவளவிலே, யுனது தந்தையாகிய வாயுதேவன் சிறிது மசைக்கமாட்டாது வருந்தியதை நீ கேட்டறிந்திலையோ, அண்டங்களாகியும் ஆன்மாக்களுக் கான்மாவாகியும் அவற்றின் வேறுயும் நிற்குஞ் சிவபிரானது குணத்தை 'அன்னியர்க் கன்னியன், அடியார்க்கெளியன்' என்ற சத்தத்தாலறிந்திடாயோ. மாருதியே, நீ செய்த சிவாபராதத்தாலிவ்வாறு தண்டனையடைந்தனை. இனிமேற் சிவபெருமானுக்காவது சிவனடியாருக்காவது தீங்கு நினைக்காதே. சிவசாநித்தியமாகிய மணலிலிங்கத்தை விலக்கி வேறு சிவலிங்கத்தையே தாபிக்க நினைத்தபடியால் அக்குற்றத்தைப் பொறுத்தருளுவர். அவர் வெறுக்கி னுலகத்திலெதுநிலைக்கும் மாருதியே, நீ விழுந்த இக்தக் குழி இன்று முதல் 'அனுமக்குழி' யென்று வழங்குக. இதிலே நீ விழுதலாற் றீமைபனைத்தும் நீங்கின. இதனது மேன்மை கூறின், சிவபெருமானது சடையினின்றுங் கௌதமியாறு தோற்றியது. அதிலே விதிப்படி ஸ்நானஞ்செய்வோர் ஆயிரம் அச்சுவமேதயாக பலனடைவர். நூறுமடங்கு விசேடமுடைய சாசுவதி கங்கை

யமுனையாகிய மூன்றுதீர்த்தங்களு மோரிடத்திங்கேயுள்ளன. தனித்தனியவற்றிலேசென்றாடும் பேற்றினு மாயிரமடங் கதிகபலனைச் சமீபமாகிய இம்மூன்று தீர்த்தங்களுங் கொடுக்கும். அந்த மூன்றினு மனந்தமுறை தீர்த்தமாடும் பயனை நீ விழுந்தவிக் குழியிலொருமுறையாடும் பலன் கொடுக்கும். பெறுதற்கரிய மக்களாய்ப் பிறந்து மிக்குழியினருகே சிராத்தஞ் செய்யாரேல் தென்புலத்தார் வெறுப்பர். இதிலே ஸ்நானஞ்செய்யாது ஆகுதியுஞ் செய்யாராயின், அவரைத் தேவரும் வெறுப்பர். அவர்களுடம் பெடுத்ததும் வீண். யாவராயினும் நினது குண்டத்திலே யெள்ளோடு தருப்பணஞ் செய்யின், அவர்களுக்கது நெய்யாருகப் பெருகும்'' என்றனர். ஸ்ரீராமன் வார்த்தையை அனுமான் கேட்டுப் பேரானந்தமடைந்து, இராமநாதனுக்கு வடதிசையிலே சமீபமாகத் தான் கொணர்ந்த சிவலிங்கப்பெருமானைத் தாபித்து அருச்சித்தனன். இராமநாதலிங்கத்திலே அனுமான் வாலினுற்சுற்றிய மூன்று வரைகளென்றுங் காணத்தக்கதாய் விளங்கும். ஆதலினு லவ்விலிங்கம் வேண்டிய இட்டசித்திகளைக் கொடுக்கும். உலகத்திலே நன்மைவிளங்கவும், இரகுகுலந் தழைக்கவு முற்பத்தியாகிய ஸ்ரீராமன் சிவலிங்கப் பிரதிட்டைசெய்த வரலாற்றை இதுகாறுஞ் சொல்லினேம். முனிவர்காள், இதனைக் கற்போருங் கேட்போரும் இராமலிங்க தரிசனைப்பேறடைந்து மேலே மோட்சம்பெற் றுய்வார்கள்.

கெந்தமாதன பாதாள பிரவேசமும் சேதுதீர்த்த வரப்பிரசாதச் சிகரமும்.

யுகதர்மானுட்டான நியதியிலும் கலிபுருஷன் தன் கடமைகளைச் செவ்வனே ஆற்றுவதிலும் புண்ய சொரூபமாகிய கந்தமாதனம் இடையூறு செய்யவல்லதாதலால் இக்குன்றத்தைப் பாதாளத்திலாழ்த்தும் செயல்பற்றி அஷ்ட லட்சுமிகடாட்சம் பொலிவுறும் கந்தமாதனத் தெய்வசபையிலே சிருஷ்டகர்த்தாவாகிய பிர்மதேவனுக்கும் அகத்தியமாமுனிக்கும் நடந்த தர்க்கவாதங்களையும் பின் ஈஸ்வர கடாட்சத்தால் கெந்தமாதனம் பாதாள பிரவேசமாகவே அதன் ஒப்புயர்வற்ற மகிமைகள் ஸ்ரீசேது தீர்த்தத்தைச் சார்ந்திருக்கும் மகோன்னத வரப்பிரசாத மகத்துவங்களையும் சொல்கின்றோம். கேட்பீர்களாக வென்று பிர்மதேவனுக்கொப்பாகிய தவுமியமாமுனிவர் பூர்வம் தர்மபுத்திராதி பாண்டவர்கட்கு உபதேசிக்க அதையின்றுங்கட்கு சொல்கின்றோம். இவை மிகவும் பொறுப்புவாய்ந்த தேவ ரகசியமென்று சூதமுனீந்திரர் உரை செய்யலாயினர்:-

கற்பக விருட்சங்களால் சூழப்பட்டதாதலால் கந்தமாதனத்துக்கு கற்பகாசலமென்றோர் பேரும் உளது. இப்பர்வதம் எப்படிப்பட்ட மஹாபாபிகளையும் அதர்மிகளையும் புனிதர்களாக்கி கற்பகோடிகால ஆயுளைத்தரவல்லது. கண்களால் தரிசித்தமாத்திரத்தில் சொர்க்கவாசத்தைத் தரவல்லது. கலியுகப்பிறப்போ மிகச்சமீபத்திலிருக்கிறது. கலியிலே எந்தயுகத்திலும் உற்பவித்திரா வண்ணம் மானிடப்பிறப்புகள் அதிகமாகும். அதர்மிகளும் பாபிகளும் சங்கையின்றித் தோன்றுவார்கள். இது கலியின் தர்மம். ஆதியந்தமில்லாத ஈஸ்வரத் திரு நீதியீதாதலால் இவை நிறைவேறினாற்றான் இந்த கலி முடிவிலே சர்வசாங்கித்ய சங்காரமாகிய யுகப்பிரளயமும் நடைபெறும். ஆதலின் கற்பக விருட்சங்களாலும் சிந்தாமணி, சங்கநிதி, பதும நிதி, காமதேனுவாகிய விரும்பியவனைத்தையுங் கொடுக்கும் சாதனங்களாலும் நிறைந்த இத்தெய்வீக மலையை உடனே பாதாளப்பிரவேசமாக்கி விடல் வேண்டும்.

இன்றேல், இம்மலை எப்போதும்போல் பூமியிற் பிரகாசித்துக் கொண்டிருக்குமேயானால் கலியுகத்தில் அதர்மிகளைக் காண்பதே அரிதாகிவிடும். சுவர்க்கம் வைகுண்டம் முதலிய புண்யலோகங்கள் ஜனநெருளால் தத்தளிக்கநேரிடும். யுகதர்மம் பிரண்டுபோய் விடும். பூலோகமென்றும் தெய்வலோகமென்றும், நரர், தேவர் என்றும் தர்மந்

அதர்மம் என்றும் இல்லாமல் ஒன்றோடொன்றா ருய்ந்துகொண்டு யாவும் சீர்குலைந்து அகிலமே மாபெருந் துக்கசாகரத்திற்குள்ளாகி விடும். அஃ தல்லாமலும், ஸ்ருஷ்டி, திதி, சம்மாரம் என்ற முத்தொழிலும் அதிகமாக சிக்கலுக்குள்ளாகி அப்படியே ஸ்தம்பித்துப்போகும். முடிவில் யுகப் பிரளயமும் நடைபெறப்போவதில்லை. கலிபுருடன் தன் கடமையைச் செய்யமுடியாது நைந்து போவானகையாற் றேவர்களே! யுகதர்மத்தை நிலைநிறுத்துவதற்கு இவ்வருள் மாமலையை சற்றே னும் தாமதமின்றி பாதாளத்திலாழ்த்திவிட வேண்டுமென பிர்மதேவன் சாங்கோப சாங்கமாய் பிரஸ்தாபிக்கவே, மஹாவிட்டுணுவானவர் பிர்மன் கூறியதை ஆமோதித்து தேவர்களாகிய நீவிர் யுகதர்மத்தை பாதுகாத்து உலகத்தை கடத் தேறச்செய்யும் நிமித்தம் வஸந்த வாசஸ்தலமாக கொண்டு அடைந்துவரும் சுயநலத்தை தியாகஞ்செய்து இக்குன்றை பாதாளஞ்சேர்ப்பதில் நீவிர்யாவரும் பின்வாங்கமாட்டீர்களென்பதாய் மொழிந்து சர்வேஸ்வரனகிய சிவபெருமானை நோக்கி இருகையுங்கூப்பி, ஒன்றுமறியாதோர் போன்று மௌனத்திருவிளையாடல்கள் புரிவ தேனே? இனியும் சோதிப்ப துனக்கழகாகுமோ? கருணை புரிவாய் பரிபூரணனே என ஸ்தோத் திரஞ் செய்து நின்றார்.

இவ்வரலாறுகளை செவியுற்ற இறையோனும் மகிழ்ந்து, அவ்வண்ணம் செய்து முடிக்கத் திருவருள் கூர்ந்து முன் விந்தியாசல பர்வதத்தை அங்குஷ்டத்தால் அமுக்கி கர்வபங்கம் செய்த மாபெரும் தபோதனராகிய அகத்திய மாமுனிவரை அழைத்து வாரும் முனிநாதா! யுகதர்மத்தை நிலைநிறுத்துவான் வேண்டி இப்புண்ய குன்றத்தைப் பாதாளத்தில் சேர்த்து விடுவீர் எனத் திருமொழி பகரவும் திருமிக்க அகத்தியனார் மிகுந்த கிலேசமுற்று கிரேதா, திரேதா, துவாபர இம் மூன்று யுகங்களிலும் தேவர், மானுடர் முதலிய சர்வ ஜீவராசிகளுக்கும் தெய்வீகச் சிறப்பை யளித்துக்காத்து வந்த கற்பகத்தைக் கலியுகத்தில் இல்லாமற்செய்து விட்டால் மனுமக்களின் கதி என்ன? அவர்களுக்கு உய்வே கிடையாதோ? கலிபுருடனுக்கு அவர்களெல்லோரும் அடிமைகள் தானோ? என உள்ளந்துடிக்க முக மண்டலமானது சிவப்பேற இடி போன்று தேவ சபையில் முழக்கம் செய்தார்.

அகத்தியனாருடைய கோபத்தையும் சிக்கலான இப்பிரச்னையையும் பார்த்த தேவசபையானது இன்னதுதான் செய்வதெனத் தோன்றாமல் ஈதென்ன விபரீதத்திற்கு இடமோ, யாது நேரிடுமோ எனக் கலங்கி மௌனத்திலாழ்ந்திருந்தது.

இங்ஙனமிருக்கையில் அங்கு எழுந்தருளி

யிருந்த மார்க்கண்டேய மஹரிஷயானவர் இதற்கு வழியாதெனெ ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தவராய் பரமேஸ்வரனுடைய பாதார விந்தங்களில் வீழ்ந்து பிரார்த்திப்பாருயினர் ஹே, ஆதிமூலா, அடியார்க்கும் அடியோய் அகிலரக்ஷகனே, தேவரீருக்குத் தெரியாத ஞாயம ஒன்றுளதோ தேவரீர் இவ்வாறு மௌனமாயிருந்தால் காரியம் நிறைவேறுவதெங்ஙனம் அகத்திய மாமுனிவருடைய பிரச்னையைத் தீர்த்து அருளுமென இறைஞ்சி நின்றுர்.

ஸ்ரீகைலாசபதியும் தன்னிடம் அகலாத பக்தியுடைய மார்க்கண்டேயரின் வேண்டுகோளைக் கேட்டு மகிழ்ந்தவராய் குறுமுனியை நோக்கிக் கூறுவாருயினர். முனிநாத! ஜீவர்களின் மீது உமக்குள் கரைகாணு அன்புக்கு நாம் அடிமையாகி விட்டோம். உமது அன்பின் அபாரமகிமையை அளவிட்டுரைப்பது யாரால் இயலும்? ஹே, அன்பு முனியே என்று அகத்தியனுரை மார்போடணைத்து மேலும் சொல்லலுற்றுர்.

பாதாளத்திலாழ்த்தப்படும் கந்தமாதனமானது பாதி நிலத்திலும் பாதி சேதுமாதீர்த்தத்திலும் சேருமாதலால் கந்தமாதன தெய்வீக பர்வதத்தின் புண்யபலன்களின் சரிபாதியை இத்தூய சேது தீர்த்தம் அடைந்து முன்னிலும் கோடிமடங்கு மகிமைபூண்டு புண்ணியங்கட்கெல்லாம் உச்சி

ஸ்தானமாகிய சிகரமாகிவிளங்கும் ''சேது'' என்றோர் முறை நாவினலுச்சரித்தவனும் ஹிருதயத்தில் நினைத்தவனும் புண்ய சிகரத்தை சத்ய பூர்வமாய் அடைந்தவனுகின்ருன் எனில், மாமுனியே உமக்குற்ற கவலை ஏனே? கவலையொழிக்குதி! இக்கற்பகத்துக்கு மந்திரபூர்வமாய் பூஜைசெய்து பாதாளப்பிராப்தம் செய்குதி எனத்திருவாய் மொழியவே, ஈசனின் அன்புகூர்ந்த அருள்மொழி கேட்ட அகத்தியனர் மனமகிழ்ந்து கட்டளையை சிரமேற்கொண்டார்.

தேவாதிகளே, இக்கற்பகம் இமயம், விந்தியம் மைநாகம் போன்று சாதாரண மகிமை படைத்ததல்ல வாதலாலும் ஈஸ்வரசொரூபம் பரிபூரண ஆனந்த மயமாய் இப்பர்வதத்தில் விளங்குவதாலும் வேதநியமங்களின்படி ஒரு மண்டலம் மந்தர பூஜைகள் எக்யங்கள் நிறைவேற்றியபின்னரே பாதாளப்பிரவேசம் செய்யவேண்டிய ஞாயங்களையும் நீவீரறியவேண்டும். இதற்காயத்தமாகுக என்றேவிய வகத்தியமாமுனியும் தாமுமாயத்தராகி ஒரு மண்டலம்வரைக்கும் மந்த்ர பூர்வமாய் பருவதத்துக்கு ஆராதனை செய்து தூபதீபங்களுங் காட்டி தமது அங்குஷ்டத்தை கந்தமாதன மலைச் சிகரத்தில் வைக்கவும் அங்குஷ்ட ஸ்பரிசமாத்திரத்தில் கற்பகமானது ஜெயஹோ! என்ற ஆரவாரத்துடன் தேவர்கள் மங்களகீதம்பாட கந்தர்வர்கள் மலர்மாரி பொழிய பாதி நிலத்திலும் பாதி சேது சாகரத்திலுமாக பாதாளத்திலாழ்ந்தது.

தேவிபட்டணம்
எனும்
தேவீபுரச்சருக்கம்.

முனிவர்கள் சூதமுனீந்திரரை நோக்கி, ஐயா, ஸ்ரீராமன் அணைவகுத்தான் என்று அருளினீர்! அவ்வணை எங்கு ஆரம்பிக்கப்பட்டது? அகலமாகிய பத்து யோசனையின் வடதிசையிலுள்ள அடிப்பாகம் எங்குளது? மேற்கயுள்ள அணையினடி எங்கு? திருவணைகட்டுவதற்கு முன் விநாயகப்பிரதிஷ்டை நவபாஷணமிட்ட தலம் யாது? இவற்றை தெளிவுபடுத்துவீர் ஞான சாகரமே எனப் பிரார்த்திக்க கருணைமிக்க சூத மாமுனி கேட்பீர்களாக என்றாரம்பித்தார்.

முத்து, நவரத்னங்களைக் கொழிக்கும் மகோததி மகாசாகரக்கரையோரமாய் தேவிபுரம் என்றோர் நகரமுளது. தெற்கு நோக்கி இலங்கை செல்லும் திருவணையினடிப்பாகத்தின் கிழக்கு கோடி தேவிபுரமேயாகும். இங்குதான் ஸ்ரீராமனனவன் கடலையடைக்கும்படி சுபமுகூர்த்தத்திலே, தனது கண்ணுகிய தாமரைமலர் சாத்த மகிழ்ந்தருளிய

சிவபெருமானது மூத்த திருக்குமாரராகிய விக்கினேசுரக்கடவுளை விக்கினங்கள் சிறிதுமணுகாதபடி தியானித்து, "எம்பெருமானே, திருப்பாற்கடலைக் கடந்தபொழுது தம்மை நினையாமையான் மத்தை யறுத்து விழுத்தி யாலகாலத்தைப் பிறப்பித்து வருத்தியதுபோல வருத்தாது அடியேனுக்கநுக்கிரகிக்க வேண்டும்" என்றுபிரார்த்தித்துத் தன்கைகளாலொன்பது கற்களை முதற்போட்டனன். அதுவே நவபாஷாணமாகும். பின்பு, நளன் வகுத்த சிங்காசனத்திலெழுந்தருளித் தானிருந்து ஐந்து தினங்களிலே இலங்கைமுடிவாகக் குரங்குப் படைகளினுற் கடலையடைப்பித்தனன்.

இத்தலத்துக்கு தேவீபுரம் என பேர் வந்த வரலாற்றினை உபதேசித்தருளுமென முனிவர்கள் வணங்க சூதர் தேவிபுர சரிதம் கூறுகின்றூர்:-

இத்தலத்திலே இலக்குமியினது மைத்துனியாகிய நாராயணி தனது பெயராற் ஒரு நகரமுண்டாக்கினள். தேவர்கள் அசுரர்களைப் போர்செய்து கொன்ற பின்பு மக்களையிழந்த திதியென்பவள் மிகவும் புலம்பி வருந்தித் தன் மகளை நோக்கிப் பெண்ணே! நீ இந்திராதி தேவர்களை வெல்லுமாறு ஒரு புத்திரனைப்பெறும் பொருட்டுத் தவஞ் செய்குதியெனவே, அவளும் எருமையினது உருவமெடுத்து வனமடைந்து, சுபாரிசமுனிவரை நோக்கிப் பஞ்சாக்கினி மத்தியி

னின்று திரிபுவனமுநடுங்க அருந்தவமிழைத் தனள்.

சுபாரிசமுனிவரானவர் அவளது தவங்கண்டு மகிழ்ந்து அச்சத்தோடு மவளெதிரே தோன்றிப் "பெண்ணே யுனது தவமுவந்தேம் நீ விரும்பிய படி யுடம்பு முழுவதுமனுடவடிவாகவுந் தலைமகிட வடிவாகவும் பெற்றவொரு புத்திரனைப்பெறுகுதி, அவன் பெயர் மகிடாசுரன். அவன் அருந்தவஞ் செய்து வரங்களைப் பெற்றுப் பெருவலிமையுடைய வனுவன்; தேவர்களை வென்னிடச்செய்வன், விசுவா மித்திர முனிவரையும் வெல்லுவன். நீ இனித் தவம் விடுத்தென்னேடு வருகுவை" யென்று சொல்லி அழைத்துக்கொண்டு போய்த் தனது பர்ணசாலையில் சிலநாளிருத்தி அவளோடு கலந்து கருப்பாதானஞ் செய்து விடுத்தனர். பின்னவர னுக்கிரகத்தால் மகிடமுகமுடைய வொருமைந் தன் சிங்கேறுபோ லவள் வயிற்றிற்றேன்றி நஞ்சு போலக் கண்டோரனைவரு மஞ்சுமாறு விளங்கி வருங்காலத்து, விப்பிரசித்தியவுணனது குமாரன் வித்துத்து மாலிமுதலியவவுணர்கள் கூடித்தாங் கள் தேவர்களுக் கஞ்சியிருந்த வச்சம் நீங்குமாறு இவனேடு வந்து கலந்து நட்புற்றனர். அவருள் வித்துத்துமாலி யென்பவன் மகிடாசுரனை நோக்கி "நண்பனே, வருகுதி, தேவலோகம் நம்மவரு டைய வாட்சியே. இப்போது தேவர்கள் விட்டுணு வின் வலிமைகொண்டு சிலகாலங்க ளின் முன்

நம்மவரை மிகவருத்தி அவ்வின்பங்களை யனுபவிக்கிறார்கள், உனது வெற்றியும் வீரமுமிதில் விளங்கும்படி யவர்களைவென்று நமதாக்குவோம்'' செல்லுதி யென்றவளவில், மகிடாசுரன் வடவை போல மிகக்கோபமுற்றுத் தேவலோகஞ் சென்று நூறுவருடமட்டும் பெரும் யுத்தஞ் செய்தலும், இந்திரன் முதலிய தேவர்கள் தோற்றோடிப் பிரமனிடஞ் சொல்ல, பிரமனும் விட்டுணுவுமவர்களோடு சென்று சத்தியோடு வீற்றிருக்குஞ் சிவபிரானையடைந்து ''எம்பெருமானே மகிடாசுரனென்பான் பெருவலிபடைத் தவுணரோடு கூடித் தேவலோகத்தைக் கைகொண்டு தேவர்களை யோட்டினன். தேவேந்திரனுந் தேவர்களும் ஒதுக்கிடமில்லாதவர்களாய் மனுடர்போலத் துன்பப்பட்டுப் பூமியில் வந்து வருந்துகின்றார்கள். அவர்களுக்கு ஒதுக்கிடந்தேவரீரது திருவடிக் கமலமன்றிப் பிறிதில்லை'' என்று விண்ணப்பஞ் செய்தனன்.

சிவபெருமானிதனைக் கேட்டமாத்திரத்தே சிறிது கோபித்தனர். சருவவியாபகராகிய வவரது கோபக்கினி, இந்திராதி தேவர்களிடத்து முண்டாகி யாகாயமளவாகிச் சுவாலித்து ஒரு பெண்ணுருவாகியது. அது சிவபெருமானது கோபாக்கினி முகமும், விட்டுணுவினது கோபாக்கினி கைகளும், இயமனது கோபாக்கினி கதுப்புக் களும், பிரமனுடைய கோபாக்கினி திருவடிகளும்,

இந்திரனது கோபாக்கினி இடையும், சந்திரனது கோபாக்கினி இருதனங்களும், வருணனது கோபாக்கினி தொடைமுழந்தாள்களும், மன்மதனது கோபாக்கினி நிதம்பமும், சூரியனது கோபாக்கினி கால் நகமும், வசுக்களது கோபாக்கினி கை நகமும், வியாழனது கோபாக்கினி நாசியும், மற்றைய நவப்பிரமர்களுடைய கோபாக்கினி தந்தவரிசைகளும், அக்கினிதேவனது கோபாக்கினி நேத்திரங்களும், சந்தியாதேவிகளினது கோபாக்கினி நெற்றிப்புருவமும், வாயுதேவனுடைய கோபாக்கினி யிருசெவிகளும், மற்றைத் தேவரது கோபாக்கினி யேனையவவையவங்களுமாகப்பெற்ற பேரழகும் பெருவலியுமுடைய பெண்ணுருவாகித் தோன்றிற்று.

சிவானுக்கிரகத்தால் இவ்வாறு பேருருவு கொண்ட பெருமாட்டியைத் தேவர்கள் கண்டு களித்தனர். சிவபெருமான் விண்டுணு பிரமா முதலியோர் அப்பெருமாட்டிக்குத் துர்க்கை யென்னும் பெயர்கொடுத்து, சூலாயுத முதலிய வாயுதங்களும், பிணையன்மாலையும், செஞ்சந்தனமும், சர்ப்பாபரணமும் கொடுத்தணியச் செய்தனர்.

துர்க்கையானவள், அவையனைத்தையுந் தரித்துச் சிங்கவாகனத்திலேறித் தேவர்கள் முனிவர்கள் முதலியவனைவரு மற்று முலகங்களும்

நடுங்குமாறு ஆரவாரித்து, இந்திராதி தேவர்கள் ஆயுதபாணிகளாகிச் சேனைகளாகச் சூழவருமிடத்து, மகிடாசூரனும் பலவவுணர்கள் சூழக் கடல் போல முழங்கி வந்து யுத்தமுயற்சியோடு சூழ, இருபக்கசேனைகளும் யுத்தஞ்செய்தார்கள். தேவர்கள் செலுத்திய வாயுதங்களினால் அவுணச் சேனைகளினது முன்னணிகள் முரிந்தோடவு மதுகண்ட மகிடாசுரன் ஆயிரகோடிசேனைகளும் இலக்கம் படைத்தலைவர்களுஞ்சூழ வந்தெதிர்த்துக் கோபாவேசனாகி வில்லைவளைத்து நாணொலிசெய்து, இந்திரன்மேற் பதினாயிரமம்பும், இயமன்மேல் ஆயிரமம்பும், வருணன்மேலெண்ணாயிரமம்பும், குபேரன்மேலாயிரமம்பும், வாயு அட்டவசுக்கள் தேவமருத்துவர் சந்திரன் அக்கினி சூரியனாதிதேவர்கள் மேல் ஒவ்வொருவருக்குப் பதினாயிரம் அம்புகளுமாகச் செலுத்தி ஆரவாரித்தனன். அதுகண்ட துர்க்கையானவள் கோபமுற்றுப் பூதர்களை நோக்கி மகிடாசுரனை யான் கொல்லுகின்றேன், நீவிர் இந்த அவுணச்சேனைகளைக் கட்டிக்கொல்லுங்களென்றனள். அவர்களதுசெய்குவேமென்று சொல்லிச் சுழல்காற்றுப்போலச் சென்றவுணரை வதைத்தார்கள்.

மகிடாசுரனானவன் தேவர்களாற்றனது சேனைகள் கலங்குதலைக்கண்ட மாத்திரத்தே அநேக சேனைகளோடு ஊழிக்காற்றுப் போல விரைந்து செல்லும்பொழுது, அவனது மந்திரிகளாகிய

மகாநாதன், அநேகபாதன், ஏகபாதன், பாதவிகீனன், ஐம்முகன், மாவனு, சண்டன், மகோதரன், மேருனன், கற்பதசூடன், மிருத்தியுநாசன், மகோற்கடன், ஏகநேத்திரன், சுலோசனன், பலோசனன் ஆகிய பதினைந்து பேரும் துர்க்கையோடெதிர்த்துப் போர்புரியுமாறு வர, அத்துர்க்கையானவள் சிங்கவாகனத்தை யெதிரேறவிட்டு வில்லைவளைத்து, அநேகாத்திரங்களைப்பிரயோகிக்க பத்திலக்கங் குதிரைகளோடும், நூறிலக்கந் தேர்களோடும், நூறிலக்கம் யானைகளோடும், அறுநூறிலக்கம் அசுரவீரர்களோடும், மாவனுவிறந்தான். ஏழுநாழிகைக்குள் மற்றையமந்திரிகளும் தங் கடங்கள் சேனைகளோடு மிறந்தனர். அதுகண்ட மகிடாசுரன் சண்டகோபனுகிய சேனுபதியை யனுப்ப, அவனுந் தனது சேனுவெள்ளங்களோடு விரைந்து சென்று, தன்னிடத்துள்ள அத்திரங்களனைத்தையுந் தேவிமீது செலுத்தினன். துர்க்காதேவியுந் திருவிளையாடலாக வவன்செலுத்திய வம்புகண்முழுவதையு மழித்து அவனது பாகனையும் தேரையும் வில்லையும் குதிரைகளையுங் கொடியையும் வெட்டினள். சண்டகோபன் மனம்புழுங்கி பரிசையோடு வாளையேந்திக் காலாளாகச் சென்று தேவியினது கையினுஞ் சிங்கவாகனத்தினும் வெட்ட, வாள் முரிந்தது. உடனே தேவியுங் கைச்சூலத்தினுலவனைக் குத்திக்கொன்றனள். அது கண்ட சித்திரபானுவென்னும் படைத்தலைவன் றனது சேனைகளோடும் யானைமேலேறி

வந்தெதிர்க்க, அவனையுஞ் சூலாயுதத்தாற் குத்திக்கொன்றனள். துர்க்காதேவி பின்னுங் கார்த்திகைவிளக்கிடாகிய புண்ணிய தினத்தில், தன்மீது வந்துவிழும் விட்டிற்பறவைகளை யெரிக்கும் விளக்குகள்போலப் பலவடிவங்களைக் கொண்டு தன்மீதுவரும் காராளன், பாட்களன், அந்தகன் ஆதிய வசுரக்கிளைகளனைத்தையு மங்கேதோன்றி யளித்தனள்.

மகிடாசுரனானவன்றனது மந்திரிகண் முதலிய சேனைகளெல்லா மிவ்வாறழிந்த பின்னர்க் கோபாவேசனா யிந்த யுத்தமிகநன்றென்று முழுதுமெருமை வடிவாகி மூச்சினாலுங் காலிற்குளம்பாதிய வுறுப்புக்களினாலு மங்குவந்த தேவியினது கணங்களையும் சிங்கவாகனத்தையும் வருந்தினன். அது கண்ட தேவியும் தனது முன்னிலையில் வந்த மகிடாசுரனைப் பாசத்தினாற் கண்கள் பிதுங்குமாறு கட்டிட, அவன் அவ்வடிவத்தையொழித்துச் சிங்கவுருவமெடுத்துப் பொருதும்படி வந்தனன். தேவியதனையுமழித்தனள். மகிடாசுரன் புருடவடிவங்கொண்டு வந்தனன். தேவியதனையுஞ் சங்கரிக்க அவன் யானைவடிவெடுத்துச் சிங்கவாகனத்தை யிழுத்தனன். சிங்கமானது கர்ச்சித்து யானையைக்கொல்லப் பழைய மகிடவடிவெடுத்து வந்தனன். துர்க்கையு மவனது வடிவுகண்டு கட்குடித்துப் பெருங்கோப முடையளாய்க் கண்கள் சிவந்து யுத்தஞ் செய்யும்பொருட்டு வர, மகிடா

சுரன் பலமலைகளைப்பிடுங்கி யெறிந்தனன். தேவி யவைகளையெல்லாமழித்து, ''மகிடனே, நான் கட்குடித்துக் கோபாவேசத்தோடு வருகின்றேன் நீ மறைத்தோடாது முன்னின்றனை, உன்னை இயமனுக்கு வாகனமாக விடுத்து நீ கைக்கொண்ட தேவபதவிகளை யவரவருக்கு விரைவிலீவேன்'' என்று மலைமேல் விழுமிடிபோல வவனது மார்பி லெகுத்தினள். மகிடாசுரனு மிகவுங்கலங்கித் தான்செல்வது இயமதிசையென்றுணர்ந்தவன் போலத் தென்றிசைநோக்கிக் கதறிச் சென்று, சமுத்திரத்தில் விழு மைநாகபருப்பதம்போலச் சக்கரதீர்த்தத்திலே விழுந்து மறைந்தனன். துர்க்காதேவியும் பின்ருடர்ந்து சென்று அவனைக்காணுதவளா யச்சக்கரதீர்த்தக் கரையி னிற்புழி, அசரீரியானது'' துர்க்கையே உனது கைக்குத்தினுன் மயங்கி யிந்தவாவியில் வீழ்ந்து மறைந்திருக்கிருன், நீ விடுக்காதிவனைக் கொல் லுதி'' யென்றது. அதுகேட்ட துர்க்கை அவனைக் கொல்லக்கருதித் தனது சிங்கவாகனத்தை நோக்கி ''சிங்கமே தீர்த்த நீர்முழுவதையும் வற்றுமாறு குடிக்குதி'' என்றவளவில் சிங்கமானது முகில் கடலைப்பருகுவதுபோல நீர்முழுதையுங்குடித்தது. மகிடனு மஃதறிந்து நாணியெழுந்து துர்க்கையி னது முன்புவந்தனன். துர்க்காதேவி யவன்றலை யிலே மிதித்து வாயினுல் வெண்ணுரைகக்குமாறு சூலத்தினுற்குத்தி மந்தரமலைபாற் கலக்குண்டு

கதறிய திருப்பாற்கடல்போலக் கதற: வாள் கொண்டு தலையையறுத்தனள்.

மகிடமுகந்துருத்தி அதனை மிதத்த திருவடி துருத்தியை யூதுமாறு பிடித்த கொல்லனது கை வெட்டியவிடம் உலைமுகம் உதிரப்பெருக்கு அக்கினியின்சிகை என்று விசேடிக்கும்படி, தேவிவெட்டியபொழுது விட்டுணுமிதிக்கக் காளியனவாயினின் றெழுந்தவிரதம் போலவும், பவளத்தை யுருக்கிவைத்த மரகதரத்தினக்குடங் கவிழ்ந்தோடியது போலவும், மகிடமுகமிரத்தம் பெருகியது. அவனது உடல் படமறுப்புண்ட பாம்புடல் போற்பதைத்தது. துர்க்காதேவி பாலைவனத்தின் மத்தியிலே மரகதரத்தின பீடத்தின்மேல் தேவர் தொழும்படி நிற்குந் தனது கோலத்தை இரத்தம் பாய்ந்த நிலமீது மகிடத்தலையிலேறிக் காட்சி கொடுத்தனள்.

மகிடாசுரனிறந்த பொழுதே தேவர்கள் பஞ்ச துந்துபிகளொலிப்பப் பஞ்சதருக்களின் மலர்களைச் சொரிந்து, கோடி இரணியர் இராவணாதியர் இறந்தகாலத்துப் பெற்ற களிப்படைந்து தேவியை வணங்கித் தங்கள் தங்கள் பதவிகளையடைந்தின் புற்றனர். பசாசு, நரி, காக்கை, கழுகாதிய பஞ்சப் புலன்களுங் களிப்படைய வெவ்வகை யுணவுகளையு மருந்திப் பசியொழிந்தன. பூமியிலுள்ளவர்கள், மகிடாசுரனிறந்தவன்று இத்தினம்போலச் சிறந்த

தினங்கண்டறியேம், இத்தினப் பிரபை சூரியப் பிரகாசத்தால் வந்ததன்று பிறிதுகாரணமேதோ வுண்டென்றதிசயித்தனர். பலவகைச் சீவகோடிகளுங் களிப்புற்றன; துர்க்கையுஞ் சமுத்திரக்கரையின் வடபாகத்துத் தேவருலகினுஞ் சிறந்த நகரமொன்றுண்டாக்கித் தனது பெயரிட்டு அங்கேயிருப்பவர்களுக்குக்கிடர் சிறிதுமணுகாது காத்தனள். தேவர்கள், அத்தேவியின் றிருவருளை வேண்டிச் சக்கரதீர்த்தத்தைத் தேவாமிர்தத்தானிரப்பிச் சிங்கங்குடித்த குறைவுதீர்த்தனர். அதனலதற்கு அமுதவாவியென்னும் பெயருண்டாயிற்று. முனிவர்காள்! இந்த அமுதவாயிலே ஸ்நானஞ்செய்வோர்களுக்கு இட்டசித்திகளனைத்தையுங் கொடுத்துத் துர்க்காதேவி யெவர்களும் வணங்கும்படி யெப்பொழுதும் பிரியாதங்கிருத்தலாலதுதேவிபுரமென்றாயிற்று. அது இக்காலத்துத் தேவிபட்டணமென்றழைக்கப்படும்.

தர்ப்பசயனம்
எனும்
திருப்புல்லாணி சருக்கம்.

முனிவர்காள்! கிழக்கேயுள்ள திருவணையினடிப்பாகம் தேவிபட்டணம் என்று முன் சோன்

ேனும். மேற்கேயுள்ள அடிப்பாகம் திருப்புல்லாணி க்ஷேத்ரமாகும். இதற்கு சேதுமூலம் என்றும் பேருளது. சக்கரதீர்த்தமென்ற நிகரற்ற வரப்பிரசாதமுடைய புண்ணிய தீர்த்தமொன்று மிங்கு பிரகாசிக்கின்றது.

சேதுகால், சேதுமூலம் என்ற இவ்விரு திருவணையடிகளிலும் ஸ்நானம்செய்து ஸ்ரீராமனை வணங்குவார்கள். நினைக்கும் எக்காரியமுஞ் சித்தியாகும். லட்சம் பிறவிகளால் செய்த பாவங்கள் நீங்கி பரமபோகமடைவர். எக்காலமும் நரகவேதனை யடையார். இவ்விருதலங்களையும் மனதிடைநினைப்பவர்கள் பிறவியெடார்கள் இது சத்யம் என்றார்.

திருப்புல்லாணி க்ஷேத்ரமாகிய இத்தலத்துக்கு தருப்பசயனம் என்ற பேர்வந்த வரலாறு கூறுதுங் கேட்பீர்களாகவென மேலும் கூறுகின்றார்.

ஸ்ரீராமச்சந்திரன் சீதா பிராட்டியாரைத் தேடுமாறு பலயிடங்கட்கு குரங்குச்சேனைகளை அனுப்பினன். அவர்களுள்ளே அனுமானெனவன் கடலைத் தாண்டி இலங்கை சென்று சீதையைக் கண்டு சூடாமணியை அடையாளமாக வாங்கிவந்து ராமனிடம் கொடுக்கவே, ஸ்ரீராமனெனவன் மகிழ்ந்து சகல சேதிகளையும் அனுமான்மூலம் தெரிந்து சீதையைமீட்டுக் துறையிற் றீவீரமாயினன். சுக்ரீவன், அனுமான், நளன், சாம்பவனாதி வானர

சேனுசைனியங்களுடன் ராமலெட்சுமணுள் மகேந்திர மலையை யடைந்து அதன் சாரலிலேயுள்ள சக்கரதீர்த்தத்தை சமீபத்திலுடைய தென் சமுத்ரக் கரையிற்றங்கி அவ்வாழிய சமுத்திரத்தைக் கடப்பதெங்ஙனமென்ற ஆலோசனையிலாழ்ந்தனன். இங்கே இங்ஙனமாக, இலங்கையில் இராவணனுடைய தம்பியாகிய விபீஷணனுனவன், அனுமான் தூதுவந்து சென்றபின்பு, தன் தமையனுகிய இராவணனுக்கு வேண்டிய புத்திகள் சொல்லவும், அவனவற்றைக்கேட்டுச் சீதையை விடாமையால் இனி இவன் இராமபாணத்தாலிறப்பது நிச்சய மிவனேடு நாமுமிருந்திறப்பதினுந் தப்புவதே நீதியென்று நான்கு மந்திரிகளோடு மிலங்கையைவிட்டு ஸ்ரீ இராமனிடத்து அடைக்கலம் புகுந்தான்.

ஸ்ரீ இராமனும், இராக்கதர்களை நம்பலாகாதென்று சிறிது சந்தேகமுற்று அனுமானுலது தெளிந்து, அவனை இராக்கதர்களுக்கரசனுக்கித் தனக்கும் மந்திரியாக்கிச் சுக்ரீவனே டொப்பாக வைத்து அனைவரையுஞ் சமமாக விருத்தி மந்திராலோசனை செய்யுமாறு தனது மனவெண்ணத்தை வெளிப்படுத்து வானுயினன். "மந்திரிகாள்! சேனைகாள்! நமது சேனைகளுக்கோ அளவில்லை; கடலோ மிகப்பெரிது; சலப்பிரவாகமோ வதிகம்; திரைகளோ மலைப்பாம்புகள்போலப் புரளுகின்றன; பிளந்தவாயுவையுடைய மகரங்கள் சுழு

வேறுக ளிடசாரி வலசாரி யாகத்திரிகின்றன; கடுங் காற்ருே வீசுகின்றது; கொடிய முதலைகளும் நீந்தித்தாண்டுதற்கரிய விக்கடலைக் கடக்கும் வழியேது? நூறுயோசனை நெடுந்தூரமுடைய இச் சமுத்திரத்தைக் கண்ட பொழுதே கண்களும், நினைத்த பொழுதே மனமு மஞ்சுகின்றன. கொடிய இடி முழக்கத்தையுங் கரியவடிவத்தையும் பிளந்த வாயையுமுடைய முகிற் கூட்டங்கணெருங்கிய வருணனுக்கு இருப்பிடமாகிய விக் கடலைப் பிறிதுதவியின்றிக் கடக்குமுபாயமென்னே? இச் சேனைகளுடனே அக்கரையேறுதற்கு ஒருவழியையு மறியேன்; படகுமுதலானவைகளிலேறிச் செல்லலாமென்ருல் படகையாவது படகு செலுத்துபவர்களையாவதுகாணேம் தந்தையை யிறக்கக்கொடுத்தும், தலைவியைப் பறிகொடுத்தும், தரையரசாளுகையை விடுத்தும், தழல்வனத்தி லலைந்துதிரிந்தும் இவற்ருல் பலவேதனைச் சகித்தேன், சமுத்திரத்தைக் கடக்குந் துயரஞ் சகிக்கமாட்டேனே, எவ்வகையா லிதனைக் கடப்பே னென்ற துன்பமே பெரிது முள்ளத்தை யீருகின்றது, அகத்திய மாமுனிவர் இராவணனைக் கொன்று கந்தமாதனத் தேறுவாயென்ற வாக்கும் பொய்யாமோ‘‘ என்றிவ்வாறு பலசொல்லி வருந்தினன்.

ஸ்ரீ இராமன், இவ்வாறு புலம்புதலைக் கேட்டுச் சுக்ரீவன் முதலியோர் வணங்கி, வாய் புதைத்து, ''எம்பெருமானே, தேவரீரிதற்கு வருந்தவேண்டாம் தெற்பங்களைக் கொணர்ந்து சமுத்திரத்தைக் கடப்போம்'' என்றார்கள். இது கேட்டவிபீஷணனிவர்கள் சொல்லியதைத் தடுத்துத் ''தேவரீருடைய சந்ததியிற் பிறந்த சகரர்களே சமுத்திரத்தைத் தோண்டி வைத்தவர்களாதலால், அது தேவரீருடைய தாள்களை வணங்கத் தக்கது. அங்ஙனஞ்செய்யின் குறித்தவினையுஞ் சடிதியில் முடிக்கலாம்'' என்றான். இவர்களது கருத்தையறிந்த ஸ்ரீ இராமன், நூறு யோசனை யகலமு மதிக ஆழமுமுடைய விச்சல நிதியைக் கடந்து போகவேண்டிய சேனைகளுக்கோ அளவில்லை; தெப்பங்களோ வனேகம் வேண்டும், சிலவாயினும் பலமுறை போய் வருவதற்குப் படகாளருக்கோ பெரிதும் வருத்தமுண்டாகும்; அன்றியும், சத்துருக்களிடையிலே வந்து கொல்லுவர். ஆதலாலவர்கள் சொல்லியபடி கடல் கடக்க நான் விரும்பவில்லை, விபீஷணர் சொல்லியதே விருப்பமாகிறது. இனிக் கடலைப் பணிவேன் அது செல்லுதற்கு வழிவிடாதாயின், அக்கினிபாணத்தினாற் குடிப்பிப்பேன்'' என்று இலக்குமணனோடெழுந்து நீர்க்கரையையடைந்து ஆசமித்து அநந்தசயனமாகத் தருப்பாசனத்திலே வருண மந்திரத்தைத் தியானித்து மூன்று நாளறிதுயில் செய்தருந்தவ மிழைத்தான். சமுத்ரராஜனுன

வருணதேவனின் உதவிகொண்டு சுலபமாயிலங்கை சேரலாம் என்ற நோக்கத்தால் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியானவர் தருப்பைப் புற்களைப்பரப்பி அதன்மேலமர்ந்து ஆகமவிதிப்படி வருண உபாசனை புரிந்ததாலித்தலத்துக்கு தர்ப்பசயனம் என்ற பேர் உண்டாயிற்று.

ஸ்ரீராமமூர்த்தியின் பாதாரவிந்தங்களில் பிரகாசிக்கா நின்ற சங்கு சக்கர ரேகைகள் சேது மூலமாகிய இப்புண்ணிய சமுத்திரத்திலே பிரகாசிப்பதாலிங்கு தீர்த்தமாடும் பலன் ஆயிரம் அசுவமேதயாகங்கள் செய்ததற் கொப்பாகும். ஸ்ரீமந்நாராயணன் ஆனந்தயோக நித்திரை புரிந்த தற்பசயனம் யோகிகட்கு கோடி பெறத் தக்கதாதலால் நீவீர் யாவரும் அங்கு சென்று வழிபடுமின்! என்பதாய் ஆசீர்வதித்தார் சூதத் திருமாமுனிவர்.

சேதுமஹாயாத்திரை.

முனிவர்காள், இனி சேதுயாத்திரை செய்யு முறையினைச் சொல்லுதுங் கேட்பீர்களாக. திரிலோகமும் புகழும் மகோன்னத புண்ணியபிரதாபமுடைய ஸ்ரீசேதுயாத்திரை செய்யவிரும்புவோர் ஸ்நானபான நியம நிஷ்டைகளைப்புரிந்து ஸ்ரீராமனும் ஸ்ரீராமலிங்கமூர்த்தியு மகிழுமாறு சற்பிரா

மணர்சட்கு விருப்பத்தோடு அன்னதானஞ் செய்வித்து விபூதி ருத்ராட்சங் தரித்து, பவித்திர தாரணஞ் செய்து சேதுயாத்திரை செய்வோமென்று சங்கற்பித்து வீட்டினின்றும் புறப்பட்டு ஸ்ரீபஞ்சாட்சர அஷ்டாட்சர தியானத்தோடு மௌனமாகிக் கோபமுதலிய தீக்குணங்கள் சிறிதுமில்லாமல் எகாக்ர நிலைகொண்டு தண்டு செருப்பு, குடை, தாம்பூலதாரணங்களையும், ஸ்திரிபோகமாதி தீமைகளனைத்தையும் விடுத்து பரோபகார சிந்தையினனாய்ப் பார்த்தவிடங்களிலெல்லாம் சிவனடியார்களை உபசரித்து, ஒருபொழுதுண்டு சேதுக்ஷேத்ர மகிமைகளை பாராயணஞ்செய்து கொண்டே பாதசாரிகளாய் வழி நடந்து சேதுமூலத்தை அடையவேண்டியது.

உப்பூர்.

1. ஸ்ரீவெய்யிலுகந்த விநாயகர் தெரிசனம்.

ஸ்ரீ ராமர் சேதுபந்தனம் செய்வதற்கு முன்முதன் முதலாக விநாயகப்பிரதிஷ்டை புரிந்த ஸ்தலம். ராமநாதபுரத்துக்கு வடகிழக்கே 22-மயில் தூரத்திலிருக்கிறது.

தேவிபட்டணம்.

2. சேதுமூலமாகிய சமுத்ர ஸ்நானம். இங்கு ராமன் நவபாஷணமிட்டபடியால் நவக்கிரகங்கட்கு

பூஜனை புரிதல் அவசியம் இராமநாதபுரத்துக்கு வடகிழக்கே 8-மயிலிலிருக்கிறது.

திருப்புல்லாணி.

3. திருவணைத்துவக்கமாகிய சமுத்ர ஸ்நானம்.

ராமர் தர்ப்பசயனத்திலமர்ந்து வருணபகவானை தியானித்தஸ்தலம். இராமநாதபுரத்துக்கு தெற்கு 7-மயிலிலிருக்கிறது.

4. சக்கரதீர்த்த ஸ்நானம்.

ஓர் அழகிய குளம். திருப்புல்லாணியில் கோவில் முன்னிருக்கிறது.

மண்டபம்.

5. வேதாளவரத தீர்த்த ஸ்நானம்.

மண்டபம் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தெற்கே இரண்டு மைல் தூரத்தில் வேதாளை என்ற சிற்றூரிலிருக்கிறது.

6. பாபவிநாச தீர்த்த ஸ்நானம்.

மண்டபம் தென் சமுத்ரக் கரையோரமிருக்கிறது.

(இராமேஸ்வரம் தீவு.)

பாம்பன்.

7. வயிரவ தீர்த்த ஸ்நானம்.

சமுத்திர ஸ்நானம் கபி தீர்த்தத்துக்கு

மேற்கிலிருக்கிறது.

8. கபிதீர்த்த ஸ்நானம்.

நாற்புரமும் படித்துறைகளாலய ஓர் அழகிய தெள்நீர் தடாகம் பாம்பன் நகர மத்தியிலிருக்கிறது.

தங்கச்சிமடம்.

9. சீதாபுஷ்கரணி தீர்த்த ஸ்நானம்.

ஓர் அழகிய திருக்குளம். தங்கச்சிமடத்துக்கு சமீபத்திலிருக்கிறது.

10. வில்லூரணி தீர்த்த ஸ்நானம்.

வடசமுத்திரத்தில் நன்னீர்குமுழிகள் கிளம்பிக்கொண்டிருக்கும் ஓர் அற்புத தீர்த்தம் தங்கச்சிமடத்துக்கு சமீபத்தில் வடக்கே யிருக்கின்றது.

11. மங்கள சரோவர் தீர்த்த ஸ்நானம்.

நாற்புரமும் படித்துறைகளாலய ஓர் அழகிய தாமரைத் தடாகம். தங்கச்சிமடத்துக்கு கீழ்புரமிருக்கின்றது.

12. இரண விமோசன தீர்த்த ஸ்நானம்.

ஓர் அழகிய நன்னீர் தடாகம். ஏகாந்தராம சுவாமி கோவிலுக்கும் ரஸ்தாவுக்கும் வடக்கிலிருக்கின்றது.

13. அமுர்தவாபி தீர்த்த ஸ்நானம்.

அமிர்தத்துக்கு ஒப்பான இனிமைமிக்கதோர்

கிணர் ஏகாந்தராமஸ்வாமி கோவிலுக்குள்ளிருக்கின்றது.

14. ஏகாந்தராமஸ்வாமி தெரிசனம்.

ஸ்ரீராமச்சந்திரன் லிங்கஸ்தாபனஞ் செய்த பின்னர் இவ்விடத்தில் ஏகாந்தமாய் வீற்றிருந்து அமுத முண்டு அனந்த சயனத்தில் சற்று துயில் கொண்டெழுந்த ரகசிய திருவிளையாடல் பெற்ற ஸ்தலம்.

தனுஷ்கோடி.

15. ஸ்ரீ சேது ஸ்நானம்.

ஏகாந்தராமஸ்வாமி தெரிசனத்தைப் பெற்றவுடன் நேரே தனுஷ்கோடி சென்று அங்கு ஸ்டேஷனிலிருந்து மூன்று மைல் தூரத்தில்" ஜெகஜ்ஜோதியாய் சர்வபவநாசனியாய் பிரகாசித்துக்கொண்டிருக்கும் ரெத்னுகரமகோததி சாகர சங்கம சேதுஸ்நானம் செய்யவேண்டியது. பிதுர், தர்ப்பணம், தானம், யாகம் முதலிய கிரிகைகள் செய்தல் முக்யம்.

கோதண்டராமன் கோயில்.

16. ஸ்ரீகோதண்டதிட்சாகுரு தெரிசனம்.

தனுஷ்கோடியிலிருந்து இராமேஸ்வரம் வரும் வழியிலிருக்கும் Flag Station இவ்விடத்தில் வருடம் ஒரு முறை விபீஷணுள்வாருக்கு ஸ்ரீராமச்

சந்திரமூர்த்தியால் இலங்கை மகுடாபிஷேகஞ் சூட்டும் வைபவம் வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. பிரதி சனிவாரந்தோறும் ஸ்ரீராமஸ்வாமி உற்சவ தெரிசனம் மிகவும் சிலாக்யம்.

இராமேசுவரம்.

17. ஜடாமகுட தீர்த்தஸ்நானம்.

ஓர் அழகிய நன்னீர் தடாகம். கோதண்டராமஸ்வாமி கோவிலிலிருந்துவரும் வழியிலிருக்கின்றது. இராமேஸ்வரத்துக்குத் தெற்கே 2-மைல் தூரத்திலுள்ள யிப்புண்ய தீர்த்தத்தில் பனிரெண்டு வருடங்களுக் கோர்முறை வியாழ பகவான் சிம்மராசிக்குவரும் மாசிமாதத்தில் மக நக்ஷத்திரமும் பௌர்ணமியும்கூடும் சுபதினத்தில் ஸ்நானம் செய்தல் கும்பகோணத்தில் 12-மஹாமஹங்களில் தீர்த்தமாடிய பலனைக் கொடுக்கும்.

18. சர்வரோக நிவாரண தீர்த்த ஸ்நானம்.

ஓர் கிணர். ஜடாமகுடதீர்த்தத்துக்கு சமீபமாய் இராமேஸ்வரத்துக்குத் தெற்கே மூன்று மைல் தூரத்திலிருக்கின்றது.

19. தெக்ஷிணகாளி என்னும் ஸ்ரீநம்புநாயகி அம்பாள் தெரிசனம்.

சர்வரோக நிவாரண தீரக்கரையில் எழுந்தருளி

யிரா நின்ற இப்பரமேஸ்வரியின் தெரிசனம் ஆரோக்யம், வீரம் தீர்க்காயுள் முதலியவற்றை அளிக்கும்.

20. தேவதீர்த்த ஸ்நானம்.

ஸ்ரீநம்பநாயகி என்னும் தெட்சினகாளி கோவிலுக்குக் கிழக்கேயுள்ள ஓர் நன்னீர் தடாகம். இத்தீரத்தில் தட்சினத்துருவன் பச்சிமத்துருவன் என்னும் இரண்டு தபோதனர்கள் கற்பகோடி காலங்கண்டவர்களாய் நிஷ்டை சமாதியிலிருந்து வருகிறார்கள். இதன்மேற்கே தேவவழியாறு என்னப்பட்ட ஓர் அழகிய மடு யிருக்கின்றது.

21. லெட்சுமண தீர்த்த ஸ்நானம்.

ஓர் அழகிய திருக்குளம். இதன்மத்தியில் ஓர் அழகிய நீராழி மண்டபம் ஆக்கப்பட்டிருக்கின்றது.

பிரதி தைப்பூசத்தன்றும் தெர்ப்ப உற்சவம் பார்க்கத்தக்கது. இத்தீர்த்தத்திலிருந்தே ஸ்ரீராமநாத தெரிசன யாத்திரை ஆரம்பமாகுவதால் இவ்விடத்தில் தீட்சை முதலியவைகளைக் கலேந்து தீர்த்தஸ்நானமாடி தீரக்கரையில் பிதுர்க்களுக்கு தில தர்ப்பணம் செய்தல் நன்று.

22. ஸ்ரீலட்சுமணேஸ்வரர் தெரிசனம்.

லட்சுமண தீர்த்தக்கரையில் கோவில் கொண்

டிருக்கும் லட்சுமணரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீலட்சுமணேஸ்வரரை வழிபடல் வேண்டும்.

23. இராமதீர்த்த ஸ்நானம்.

ஓர் திருக்குளம். லட்சுமண தீர்த்தத்துக்கு கிழக்கே டவுனிலிருக்கின்றது.

24. ஸ்ரீராமர் தெரிசனம்.

இராமதீர்த்தக் கரையிலுள்ள ஓர் அழகிய சிறு கோவில் சீதாலட்சுமண ஹனுமத் சமேத ஸ்ரீராமஸ்வாமி தெரிசனம்.

(கெந்தமாதன பர்வதம் மெயின் ரஸ்தாவில்)

25. சுக்ரீவ தீர்த்த ஸ்நானம்.

ஓர் குளம் சாலைப் பாதைக்கு மேற்கிலிருக்கின்றது.

26. அங்கத தீர்த்த ஸ்நானம்.

ஓர் கிணர். சுக்ரீவ தீர்த்தத்துக்கு வடக்கிலிருக்கிறது.

27. ஜாம்புவ தீர்த்த ஸ்நானம்.

ஓர் கிணர். அங்கத தீர்த்தத்துக்கு வடக்கிலிருக்கிறது.

28. வாலி தீர்த்த ஸ்நானம்.

ஜாம்புவ தீர்த்தத்துக்கு வடக்கிலிருக்கிறது.

29. கெந்தமாதன ஹநுமதெரிசனம்.

ஒரு அழகிய சிறுகோவில் கெந்தமாதன பர்வதத்தடியில் இருக்கும் இக்கோவிலானது மஹாபரிசுத்த பைராகிகளாகிய திருப்பதி தேவஸ்தான மகந்துகளால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

30. ஸ்ரீ கெந்தமாதன பர்வத தெரிசனம்.

இராமேஸ்வரம் மெயின் பஜாரிலிருந்து நேர் வடக்கில் இரண்டு மைல் தூரத்திலிருக்கிறது. இப்பர்வத மண்டபம் இரண்டுக்கு மாடிகளையுடைய திருமிகுந்த தோற்றத்துடன் நாற்புறமும் வனப்பு மிக்க வனங்களின் இயற்கைக்காட்சிகளுக்கிடையே சதாகாலமும் தென்றலானது மனோரம்மியமாய் குளிர்ந்து வீசிக்கொண்டிருக்கக் கெந்தமாதன பர்வதமானது அங்கு வசிப்போர்கட்கு சாந்தியை யளித்துக்கொண்டிருக்கிறது.

இப்பர்வத மண்டபத்தில் நின்று நோக்கினால் ராமேச்வரதீவும் நாற்றிசையே சூழ்ந்துள்ள சமுத்ரமும் தெற்றெனத்தோன்றும்.

இராமேஸ்வர யாத்திரைக்குவரும் ஒவ்வொருவரும் புண்யசொருபமான இக்கெந்தமாதனபர்வத தெரிசனமும் அங்கு ஸ்ரீராமபாத தெரிசனமும் அவசியம் செய்தல் வேண்டும்.

(அஷ்ட தீர்த்தம் சாலைப்பாதையில்)

31. தர்ம தீர்த்த ஸ்நானம்.

ஓர் நன்னீர்த் தடாகம் கெந்தமாதன பர்வதச் சரிவில் சேது வாரண்யத்திலிருக்கிறது.

32. பீமதீர்த்த ஸ்நானம்.

ஓர் தடாகம். தர்மதீர்த்தத்திற்கு கிழக்கிலிருக்கின்றது.

33. அர்ஜுன தீர்த்த ஸ்நானம்.

ஓர் அழகிய குளம் பீம தீர்த்தத்துக்கு கிழக்கே இருக்கின்றது.

34. நகுல தீர்த்த ஸ்நானம.

ஓர் திருக்குளம். அர்ஜுன தீர்த்தத்திற்கு கிழக்கே இருக்கின்றது.

35. சகாதேவ தீர்த்த ஸ்நானம்.

ஓர் தடாகம் நகுல தீர்த்தத்திற்கு கிழக்கிலிருக்கிறது.

36. பிர்மகுண்ட ஸ்நானம்.

ஓர் நீர் நிலைக்குண்டு சகாதேவ தீர்த்தத்திற்கு கிழக்கே இருக்கிறது.

37. பரசுராம தீர்த்த ஸ்நானம்.

ஓர் அழகிய தடாகம். பிர்மகுண்டத்திற்கு தென்மேற்கில் இருக்கிறது.

38. த்ரௌபதை தீர்த்த ஸ்நானம்.

ஓர் குளம் பிர்மகுண்டத்திற்கு தெற்கிலிருக்கிறது.

39. இலங்கை மாகாளி என்னும் உத்தரகாளி தெரிசனம்.

த்ரௌபதை தீர்த்தத்திற்கு தெற்கிலிருக்கிறது. ஓர் அழகிய கோவில் வருடம் ஓர் முறை இங்கு உற்சவம் மிகுந்த ஆடம்பரமாய் நடைபெறும்.

40. அனுமகுண்ட ஸ்நானம்.

ஓர் திருக்குளம், உத்தர மாகாளி கோவிலுக்குத் தெற்கிலிருக்கின்றது. இத்தீரத்தில் புத்திர காமேஷ்டி யாகம், நாக பிரதிஷ்டை செய்தல் சாஸ்திரோக்தம்.

இத்தீர்த்தக் கரையில் கோயில் கொண்டிருக்கும் வால் அறுபட்ட அனுமார்தெரிசனை செய்ய வேண்டியது.

41. அகஸ்திய தீர்த்த ஸ்நானம்.

ஓர் சிறு குளம். அனுமகுண்டத்திலிருந்து கிழக்கிலோடும் சாலைப்பாதை வழியே சென்றால் கீழ்சமுத்திரக் கரையிலிருக்கும் இத்தீர்த்தத்தை அடையலாம். அகத்தியமாமுனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சந்தான விநாயகக் கடவுள் தெரிசனம் செய்யவேண்டியது.

42. அக்கினிதீர்த்த ஸ்நானம்.

கீழ்சமுத்திர ஸ்நானம் இவ்விடத்தில் பிதுர் தெர்ப்பணம் சிருர்த்தம் செய்தல் நன்று.

43. பூர்வ காளி என்ற உஜ்ஜினிமாகாளி தெரிசனம் சன்னதித் தெருவில் அக்கினிதீர்த்த சமுத்தரக் கரையிலிருக்கின்றது.

44. நாகதீர்த்த ஸ்நானம்.

ஓர் திருக்குளம். கீழரதவீதியில் ராமமந்திர மடத்துக்குள்ளிருக்கிறது.

(ஸ்ரீராமநாத திரு ஆலயத்திற்குள்)

45. மகாலெக்ஷுமி தீர்த்த ஸ்நானம்

ஓர் அழகிய தடாகம் அனுமார் சன்னதிக் கெதிரில் இருக்கிறது.

46. காயத்ரீ தீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர். அனுமார் கோவிலுக்கு மேற்கே சுவாமி சன்னதி மெயின் கேட்டிக்கு வடக்கே கிழக்குக் கோட்டை ஓரமாக இருக்கின்றது.

47. சவித்ரீ தீர்த்த ஸ்நானம்

ஓர் கிணர். காயத்ரீ தீர்த்தத்திற்கு அடுத்திருக்கிறது.

48. சரஸ்வதி தீர்த்த ஸ்நானம்

ஓர் கிணர் சாவித்ரீ தீர்த்தத்திற்கு அடுத்

திருக்கிறது மேற்கண்ட காயத்ரீ, சாவித்ரீ, சரஸ்வதி இம்மூன்று தீர்த்தங்களும் மூன்று தடுக்குகளையுடைய ஒரே கிணராக இருக்கிறது.

49. சங்க தீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் கிழக்கு இரண்டாம் பிரகாரத்தில் வடபக்கம் இருக்கின்றது.

50. சக்கர தீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் கிழக்கு இரண்டாம் பிரகாரத்தில் தென்பக்கமுளது.

51. சிவதீர்த்த ஸ்நானம்

ஓர் திருமிகுந்தடாகம் சுவாமி சன்னதி நந்திக்கு தென்பக்கமிருக்கிறது.

52. கயாதீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் வடக்கு இரண்டாவது பிரகாரத்தில் கீழ்பக்கமிருக்கிறது.

53. கங்காதீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் ஷெபிரகாத்தில் கயாதீர்த்தத்துக்கு மேற்கிலிருக்கிறது.

54. யமுனை தீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் கங்காதீர்த்தத்துக்கு தென்கிழக்கில் இருக்கின்றது.

55. சூர்யதீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் கங்கா தீர்த்தத்துக்கு வடமேற்கில் இருக்கின்றது.

56. சந்திர தீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் சூர்ய தீர்த்தத்துக்கு மேற்கில் இருக்கின்றது.

57. பிர்மஹத்தி விமோசன தீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் சந்திர தீர்த்தத்துக்கு மேற்கில் இருக்கின்றது.

58. சர்வ தீர்த்த ஸ்நானம்

ஓர் அழகியகிணர் ஸ்வாமிசன்னதியில் கிழக்கு முதற்பிரகாரத்தில் தென்கிழக்குப் பக்கம் இருக்கின்றது.

59. சாத்தியாமிர்த தீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் அம்மன் சன்னதியில் கொடிமரத்துக்கு அருகிலிருக்கின்றது.

60. சேதுமாதவ தீர்த்த ஸ்நானம்

ஓர் அழகிய படித்துரைகளாலாய திருக்குளம் மேற்கு மூன்றும் பிரகாரத்தி லிருக்கின்றது.

61. நள தீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் சேதுமாதவர் கோவிலுக்குள் சன்னதிக்கு தெற்கிலிருக்கின்றது.

62. நீல தீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் நள தீர்த்தத்துக்கு மேற்கில் இருக்கின்றது.

63. கவயதீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் நீலதீர்த்தத்துக்கு மேற்கில் இருக்கின்றது.

64. கவாட்ச தீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் கவயதீர்த்தத்துக்கு தென் கிழக்கில் இருக்கின்றது.

65. கெந்தமான தீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் கவாட்ச தீர்த்தத்துக்கு வடகிழக்கில் இருக்கின்றது.

66. கோடிதீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் சுவாமி சன்னதியில் முதற் பிரகாரத்தில் விசாலாட்சி கோவிலுக்கு கிழக்கிலிருக்கின்றது. கடைசியாக யித் தீர்த்தத்திலாடியதும் சேது தீர்த்தயாத்திரை பூர்த்தி யடைகின்றது. இப்பவித்ர கோடி தீர்த்தத்தை இராமேசுரம் பிரசாதமாக யாத்திரீகர்கள் எடுத்துச் சென்று பந்துமித்திரர்களுக்கு வழங்குதல் சாஸ்திரயுக்தம் வழக்கம்.

67. ஸ்ரீ ஹனுமத் லிங்கமாகிய காசி விஸ்வ நாதர் தெரிசனம்

ஸ்ரீ இராமநாத ஆலயத்துக்கு வடக்கிலிருக்கின்றது.

68. ஸ்ரீஇராமலிங்கமாகிய ஸ்ரீராமநாதசுவாமி தெரிசனம்.

இப் பிரதம தெரிசனத்தை ஆகம விதிப்படி கொள்ளல் வேண்டும்.

69. ஸ்ரீபர்வதவர்த்தினி அம்பாள் தெரிசனம்.

ஸ்ரீ இராமநாதசன்னதிக்கு தெற்கிலிருக்கிறது

70. ஸ்ரீ ஆஞ்சனேயர் தெரிசனம்


சுவாமிசன்னதியின் பிரதமவாசல் முகப்பில் இருக்கின்றது.

71. சேதுமாதவ தெரிசனம்

மூன்ரும் பிரகாரத்தில் மேலக்கோபுரத் தண்டையிலிருக்கின்றது.

72. சாட்சிவிநாயகர் தெரிசனம

பாம்பன் ரஸ்தாவில் இருக்கும் ஓர் அழகிய கோவில் இராமேஸ்வரம் டவுனிலிருந்து 2- மயில் மேற்கிலிருக்கின்றது வனங்களிடையே யிக் கொவிலிருப்பதால் இதற்கு "காட்டுப்பிள்ளையார் கோவில் என வழங்கப் படுகின்றது.



MUTHUSAMY NAIDU, MADURA. பருவதவர்த்தினி (COPY RIGHT.) இராமநாதசுவாமி N. P. LTD. SIVAKASI

தெய்வத்தன்மை பொருந்திய
சேதுபதி மன்னர் பிரானின் திருவரண்மனையில்
ஸ்ரீசேதுபீட தெரிசனத்தால் சேதுயாத்ரை சம்பூரணமாதல்.

இராமேஸ்வரத்தில் சாட்சி விநாயகர் தெரிசனம் பெற்றபின் யாத்திரீகர்கள் இராமநாதபுரம் செல்லல்வேண்டும். புண்யசொரூபமாகிய ஸ்ரீகெந்தமாதனத்தையும் கோடானுகோடி பவித்திர தீர்த்தங்கள் வசிக்கும் தனுஷ்கோடியையுமுடையவரும் ஸ்ரீ இராமநாத கடவுள் திருவாலயம் கொண்டிருக்கும் சேதுத் தீவை அரசாட்சி செய்யாநின்ற சேதுபதி மன்னர்பிரானின் திருவரண்மனை யாகிய ஸ்ரீ ராமலிங்க விலாசத்தில் பூர்வகாலத்தில் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியினால் ஸ்தாபிக்கப்பட்ட தெய்வத் தன்மையுடைய ஸ்ரீ சேது பீடத்தை சேதுபந்தனத்தின் ஞாபகார்த்தமாகவும் ராமாவதாரத்தின் நோக்கங்களெல்லாம் நிறைவேறி தர்மத்தைநிலைநாட்டியதின் பொருளாகவும் தெரிசனை புரிபவர்களே சேது மஹா யாத்திரையின் சம்பூரண பலனை சாஸ்திரோக்தமாய் பெற்றின்புறுவர் என்பதாய் முழக்கிய சூதமுனிவர் ஸ்தல காண்டத்தை பூர்த்திசெய்வித்து தீர்த்த காண்ட பாராயணஞ்செய்வாருயினர்.

தலமகத்துவ காண்டம் முற்றிற்று.

(தீர்த்தமகத்துவ காண்டம்.

நவபாஷாண தீர்த்தம்.

மகாலெட்சுமியாகிய சீதாபிராட்டியை மீட்டி வரும் நிமித்தம் இலங்கையை அடைவதற்கு சேது சமுத்திரத்தைக் கடந்து செல்ல அணை கட்டித் தீர வேண்டியிருப்பதால், ஜோதி சொருபமாக யிருக்கப்பட்ட சேதுவை அடைப்பது மகா தோஷம் என்பதை உணர்ந்த ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி, வருணபகவானல் ஸ்ரீசேது மூலத்தில் நவக்கிரகங்களை ஸ்தாபித்து விதிப்படி பூஜித்தால் சேது பந்தனம் வெற்றிகரமாய் நிறைவேறும் என்று உபதேசிக்கப் பட்டவருய் சேது மூலமாகிய சமுத்திரத்தில் ஒன்பது சிலைகளை நாட்டி விதிப்படி வழிபட்டு சேதுமூலத்திற்கு "நவபாஷாண தீர்த்தம்" என நாமமிட்டு அனேக வரப்பிரசாதங்களையும் அத் தீர்த்தத்துக்கு அருளினர்.

இத்தீர்த்தத்தில் ஸ்நானமாடி இங்கு ஸ்தா பிக்கப்பட்டிருக்கும் நவக்கிரகங்களைப் பூஜித்தோர் கொடிய கிரகங்களின் பார்வையாலுண்டாகும் சொல்லொணு கஷ்டங்களினின்றும் விடுவிக்கப் பட்டு தேக ஆரோக்யஸ்தர்களாகவும், இஷ்ட

உ

அன்பே சிவம்.

புத்தக விளம்பரம்.

சேதுராமேஸ்வர ஸ்தல புராணம்.

[இவ்வரிய நூலிலடங்கிய விஷயங்கள்]

கெந்தமான பருவதமகுத்துவம், இருபெருஞ் சாகரசங்கமும் ஸ்ரீ சேது தீர்த்த விளக்கமும், சேதுபந்தனம், ராவணாதி பிர்மஹத்தியும் ஸ்ரீ ராமர் சிவலிங்க பூஜையும், சேதுயாத்திரை விளக்கமும், புண்ணிய தீர்த்தங்களும், அவைகளின் தனித்தனி சரித்திரங்களும் துலா புருடாதி அனேக தானங்களின் மகத்துவம். சிவராத்திரி மகத்துவம் இராமநாதபுரம் அரண்மனையில் ஸ்ரீ சேதுபீட தெரிசனமும் சேது யாத்திரை சம்பூரணமும் மூன்று காண்டங்களையுமுடைய இப்புத்தகம் உயரிய தமிழ் நடையில் ஸ்காந்தம் முதலிய புராண ஆராட்சிகளுடன் நான்கு அழகிய கலர் படங்களுடன் உள்ள புத்தகம் விலை ரூ 1—8—0.

திருக்குற்றால க்ஷேத்திர புராணம் புத்தகம் 1-க்கு விலை ரூ 0—12—0.

வேண்டுவோர்களுக்கு வி. பி. மூலம், அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

பார்வதி பிரஸ், வடக்குவீதி, இராமேஸ்வரம்.